Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 04 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 24 (19.12.2003) வெள்ளிக்கிழமை இதழ் :80

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள் இல்லங்களிலிருந்து உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்

**INTERNET**

மூலம் தொடர்புகொள்ள உள்நாடு, வெளிநாடுகளுக்கான சகலவிதமான துரித தபால்/பொதிகள் சேவை

**திருமுருகன் கொம் நெற்**

இல.46, ஆடியபாதம் வீதி,
(ப.நோ.கூ.ச. முன்பாக)
திருநெல்வேலி
T.P -021-222-7310
(சி-1844)

## நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தலுக்கு உத்தரவிடப்படுமா?

### அரசியல் வட்டாரங்களில் முரண்பாடான தகவல்கள்

(கொழும்பு)


2004 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேறியுள்ள நிலையில் - ஜனாதிபதி சந்திரிகாவிற்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான அதிகார இழுபறிக்கு தீர்வு காணப்படாமையால் நாடாளுமன்றத்தைக் கலைத்து, புதிய தேர்தலுக்கு உத்தரவிடுவது தொடர்பான விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும், ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் இடையிலான அதிகார இழுபறிக்கு தீர்வுகாண எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவும், தோல்வி கண்டுள்ள நிலையில் - நாடாளுமன்றைக் கலைத்து புதிய தேர்தலுக்கு உத்தரவிட ஜனாதிபதி சந்திரிகா விருப்பம் கொண்டுள்ளதாக செய்திகள் வெளியாகியிருப்பதுடன், ஐக்கிய தேசிய முன்னணி

(10 ஆம் பக்கம் பார்க்க)

'பொடா' சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த

## பழ.நெடுமாறன் உள்ளிட்ட நான்கு பேரை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி!



(சென்னை)

'பொடா' சட்டத்தின் கீழ் கைதாகி தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் உள்ளிட்ட நான்கு பேரை பிணையில் செல்ல சென்னை உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதாகக் கூறி தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், தாயப்பன், பாவாணன், வீரபாண்டியன் உள்ளிட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு கடலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

தங்களைப் பிணையில் விடுதலை செய்யக் கோரி நெடுமாறன் உள்ளிட்ட நான்கு பேரும் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுவை விசாரணை செய்த (10 ஆம் பக்கம் பார்க்க)

# திட்டவரையும், கடற்புலிகளின் அபார வளர்ச்சியும் இந்தியாவை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளதாம்!



## புதுடெல்கியில் கதிர்காமர் கருத்து

(சென்னை)

**விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகத் திட்டவரையும் அவர்களது கடற்புலிகளின் அபார வளர்ச்சியும் இந்தியாவை மிகுந்த நெருக்கடிக்குள் தள்ளியிருப்பதாக, முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.**

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள இவர், அங்கு இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது -

போர்நிறுத்தம் நடைமுறையிலுள்ள கடந்த இரண்டு வருட காலத்தில், விடுதலைப் புலிகள் தமது படையமைப்பை எவ்வாறு கட்டி வளர்த்தார்கள் என்ற எனது கருத்தை இந்தியா உன்னிப்பாகக் கேட்டுள்ளது.

அத்துடன், விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் தொடர்பில் இந்தியக் கடற்படை மிகுந்த நெருக்கடியைச் சந்தித்துள்ளது. இது

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



பக்கத்து வீட்டாலரை உசுப்பிவிடுறதுதான் உவருக்கு வேலையாப் போச்சு...!

## பொலிஸ்மா அதிபராக இந்திரா டி சில்வா நியமனம்!

(கொழும்பு)

இலங்கையின் 27 ஆவது பொலிஸ்மா

## மலிக் – மனோ குழுவினரின் பேச்சுகள் மூலம் பல விடயங்களில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது!

## 32 மேலதிக வாக்குகளால் வரவு செலவுத் திட்டம் நிறைவேறியது

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின்

## பொலிஸ்மா அதிபராக இந்திரா டி சில்வா நியமனம்!

(கொழும்பு)

இலங்கையின் 27 ஆவது பொலிஸ்மா அதிபராக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியும், பதில் பொலிஸ்மா அதிபருமான இந்திரா டி சில்வா நியமிக்கப்படவுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா அந்த நியமனத்திற்கான ஒப்புதல் வழங்கியுள்ள அதேசமயம் அரசியல் அமைப்புச் சபையும் இதற்கு இணக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய இராணுவத் தளபதி அரச அதிகாரிகளுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக பதவியேற்ற மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால நேற்று யாழ். நகரின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்தார். நேற்றுக் காலை ஹெலிகொப்டர் மூலம் யாழ். நகரை வந்தடைந்த இராணுவத் தளபதி அங்கிருந்து இராணுவ வாகன மொன்றில் யாழ். செயலகத்திற்கு சென்றார்.

அங்கு அரச அதிபர் செ.பத்மநாதன் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவொன்றை சந்தித்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய பிரதிப் பொலிஸ் மா அதிபர் யாழ்.மாவட்டத்திற்கு நியமனம்!

(கொழும்பு)

யாழ்.மாவட்டத்துக்குப் பொறுப்பான புதிய பொலிஸ்மா அதிபராக விக்ரர் பெரேரா நியமிக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் ஜனவரி 05 ஆம் திகதி புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் யாழ்ப்பாணத்தில் தமது கடமையைப் பொறுப்பேற்பார் எனத் தெரியவருகிறது.

# மலிக் - மனோ குழுவினரின் பேச்சுகள் மூலம் பல விடயங்களில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது!

## அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

மலிக் சமரவிக்கிரம - மனோ தித்தவெல செயற்குழு நடாத்திய பேச்சுவார்த்தைகளின் மூலம் பல விடயங்களில் உடன்பாட்டுக்கு வரமுடிந்ததுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் நேறறுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

பொருளாதார வளர்ச்சி, ஜனநாயக நிறுவனங்களை பலப்படுத்தல் மற்றும் சட்டத்தை அமுல்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக உடன்பாடு காணப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

எனினும் பாதுகாப்பு அமைச்சு சம்பந்தப்பட்ட அடிப்படை பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை எனவும், ஊடக சுதந்திரத்துக்கு கட்டுப்பாடு விதிக்கும் சிற்சில விசேட ஒழுங்குகள், சட்டத்தில் தற்போது உள்ளடக்கப்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டிய அமைச்சர், சில நாடுகளின் சட்டத்தில் அவ்வாறான தடைகள் இல்லை என்றும் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் தமது கடமையை முறையாகச் செய்வதற்கு ஏற்படும் தடைகளை ஆராய்ந்து பார்க்கும்போது அவற்றில் பலவற்றை நாடாளுமன்ற சட்டமூலத்தினால் நீக்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் அத்துருகிரிய வீடமைப்புத் தொகுதியில் அமைந்திருந்த இராணுவ பாதுகாப்பு வீடு ஒன்று முற்றுகையிடப்பட்டது தொடர்பான தகவல்களை பெறுவதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

# புலிகளால் தனது உயிருக்கு ஆபத்து என்கிறார் சங்கரி!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் தான் எந்நேரமும் கொல்லப்படலாமென அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவு தன்னை எச்சரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார் தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவரான வீ.ஆனந்தசங்கரி.

ஏற்கனவே விடுதலைப் புலிகளின் அமைப்பினால் தனக்கு கொலைப் பயமுறுத்தல் உண்டெனவும், இதற்காக அவர்கள் தமது புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவரை அமர்த்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கூட்டணியின் தலைமைக் காரியாலயத்தில் தன்னைக் கொல்லும் நபரை அமர்த்தியிருப்பதால் அந்த அச்சுறுத்தல் காரணமாக, தான் தலைமையகத்துக்குச் செல்ல முடியாதிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப்புலிகள் தான் என்பதனை தான் ஏற்க மறுப்பதே இந்தப் பிரச்சினை எல்லாவற்றிற்கும் காரணம் எனவும் ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

## 32 மேலதிக வாக்குகளால் வரவு செலவுத் திட்டம் நிறைவேறியது

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் 2004 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம், 32 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேறியது.

நேற்றுமாலை 6 மணியளவில் நடைபெற்ற வாக்கெடுப்பில் வரவு - செலவுத் திட்டத்திற்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விடுமுறையில் செல்கிறார் மனோ தித்தவெல!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சிரேஷ்ட ஆலோசகரான மனோ தித்தவெல கிறிஸ்மஸ் பண்டிகையை ஒட்டி விடுமுறையில் வெளிநாடு செல்லவுள்ளார். இவர் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான அரசியல் நெருக்கடியைத் தீர்க்கும் மனோ - மலிக் குழுவின் பணிகள் இடைநிறுத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் கருத்து வெளியிடுகையில் விடுமுறையில் வெளிநாடு செல்லும் மனோ தித்தவெல அடுத்த வருடம் ஜனவரி முதல் வாரத்திலேயே

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவிலில் திருடப்பட்ட சிலை ஓமந்தைப் பகுதியில் சிக்கியது!

(கொக்குவில்)

கொக்குவிலில் உள்ள கோயில் ஒன்றில் திருடப்பட்ட பிள்ளையார் சிலை ஓமந்தைச் சோதனைச்சாவடியூடாக கடத்திச்செல்ல முற்பட்டபோது, பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாகத் தெரியவருகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை ஓமந்தை சோதனைச்சாவடியூடாக பிள்ளையார் சிலையை கடத்திச்செல்ல முயன்ற கொக்குவிலைச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். மாணவர்களின்

# பல்கலைக்கழக அனுமதியிலான சுரண்டல்கள் கல்விச் சமூகத்தை அதிர்ச்சிக்கு ஆளாக்கியுள்ளது

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

நீண்ட தொடர்ச்சியான அவல வாழ்க்கை நிறைந்த யுத்த காலத்திில்கூட மக்கள் கட்டிக்காத்துவந்த பெருஞ்செல்வம் அவர்களது கல்விப் பாரம்பரியம் என்பது நிதர்சனமான உண்மையாகும்.

ஆனால், காலத்துக்குக்காலம் அந்தக் கல்விச் செல்வத்துக்கு சாவு மணி அடிக்கும் நோக்கமாகத் தொடர்ச்சியாக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. அவற்றின் உச்சக்கட்டமாக யாழ். மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியில் மேற்கொள்ளப்படும் சுரண்டல்கள் யாழ். கல்விச் சமூகத்தை பெரும் அதிர்ச்சிக்கும், ஆத்திரத்துக்கும் உள்ளாக்கியுள்ளது.

- இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

கடந்த ஆண்டில் அதாவது, 2002/2003 (A) கல்வியாண்டில் யாழ். மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்டக் கோட்டா எண்ணிக்கையில் பெருங்குறைப்பு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டது. இதனால், அனைத்துத் துறைசார் மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், விழித்துக்கொண்ட ஒட்டுமொத்த யாழ். கல்விச்சமூகம் எடுத்துக்கொண்ட அயராத முயற்சியும், தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொடர்ச்சியான ஒத்துழைப்பும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுத்தந்தன.

குறிப்பிட்ட கற்கைநெறி ஒன்றுக்கு மாணவர்கள் தெரிவுசெய்யப்படும் விதமானது, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பல்கலைக்கழக அனுமதிக்கான முதற்பத்திரிகை நூலில் (First Form) பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

1. தீவளாவிய திறமையின் (Merit) கீழ் 40 %
2. மாவட்டக் கோட்டாவின் (Quota) கீழ் 55 %
3. கல்வியில் பின்தங்கிய மாவட்டத்துக்கான அனுமதியின் (Educationally Disatrandanged District) கீழ் 5 %

ஒரு குறிப்பிட்ட கற்கைநெறிக்கு மாணவர்களைத் தெரிவுசெய்யும் போது மேலே (1), (2) இன் கீழ் ஏதாவது ஒரு மாவட்டத்துக்கு ஒதுக்கப்படும் இடங்கள், அடிப்படைக் கல்வியாண்டான 1993/1994 இல் ஒதுக்கப்பட்ட இடங்களைவிடக் குறையாதவாறு உறுதிசெய்யப்படும். இதற்கமைவாக (2), (3) என்பன ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தின் சனத்தொகை வீதத்திலும் குறித்த துறைக்கான மொத்த அனுமதியிலும் மட்டுமே தங்கியுள்ளது.

யாழ். மாவட்டத்தின் சனத்தொகைக் கணக்கெடுப்பு நடைபெறாததால் - 2, 3 இல் தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கை குறிப்பிட்ட கற்கைநெறிக்கான மொத்த அனுமதியில் மட்டுமே தங்கியுள்ளது. மேலதிகமாக 1993/1994 பொறியியல் பீடத்துக்கு மொத்த அனுமதி 698. யாழ்ப்பாண மாவட்டக் கோட்டா 42. எனவே இதை விடக் குறையாது பேணப்படுதல் வேண்டும்.

ஆனால், இம்முறை யாழ்.மாவட்டக் கோட்டா (MPR) - 26 (?). இவ்வாறு தொடர்ச்சியாக, படிப்படியாக மேற்கொள்ளப்பட்டுவரும் குறைப்பினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| கல்வியாண்டு | பொறியியல் துறை மாவட்ட கோட்டா | மொத்த அனுமதி (பொறியியல்துறை) |
|---|---|---|
| 1999/2000 | 34 | 871 |
| 2000/2001 | 33 | 926 |
| 2001/2002 | 34 | 974 |
| 2002/2003 (MPR) | 31 | 870 |
| 2001/2003 (MPR) | 18+12=30 | 870 |
| 2003/2004 (MPR) | 26 | 861 |

இவ்வாறு தொடர்ந்து வரும் கல்வியாண்டுகளில் மாவட்டக் கோட்டா எண்ணிக்கையில் குறைப்பு மேற்கொள்ளப்பட்ட நிலையிலும், தீவளாவிய (Merit) திறமையின் அடிப்படையிலும் தெரிவானோரின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்பட்டதாலும் யுத்த சூழ்நிலை தொடர்ந்தாலும், பல இடர்களை யாழ். சமூகம் எதிர்கொண்டாலும், இவ்விடயத்தில் யாழ். கல்விச்சமூகம் வாழாவிருந்தது.

இதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு - தொடர்ந்துவந்த காலங்களில் பல்கலைக்கழக அனுமதியில் அதிகரிப்பு என்ற மாயத்தோற்றத்தை உண்டு பண்ணி, பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்டக் கோட்டா எண்ணிக்கையைக் குறைத்துக்கொண்டே வந்துள்ளது.

1993/1994 இல் யாழ்ப்பாணம் கல்வியில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்கப்படவில்லை. எனினும் தற்காலத்தில் பின்தங்கிய மாவட்டமாகவே அறிவிக்கப்பட்டுள்ளது. பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்கப்பட்ட பின், உண்மையில் மாவட்டக் கோட்டா அனுமதி + பின்தங்கிய மாவட்டக் கோட்டா அனுமதி இரண்டும் சேர்ந்து 42 இலும் அதிகமாகவே காணப்படவேண்டும் எனினும் அது அவ்வாறு நிகழவில்லை.

இந்த வருடம் பொறியியல் துறையுடன் சேர்ந்து பௌதீக விஞ்ஞானத்துறையிலும் பெரும் பாதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, தமிழ் மாணவர்களின் கல்வியை திட்டமிட்டவகையில் புறக்கணிக்கப்படுவதை எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது. இது தொடர்பாக அனைத்துத் தரப்பினரும் கவனத்தில் கொண்டு பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நீதியான தீர்வு கிடைக்க முயற்சிக்க வேண்டுமென வேண்டுகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கத்தில் பதிவுகள் மேற்கொண்ட அனைவரையும் - இன்று 11.30 மணியளவில், பிறவுண் வீதியில் உள்ள பிறைற்மன் கல்வி நிலையத்திற்கு வருமாறு தலைவர் கேட்டுள்ளார்.

### சான்றிதழ் வழங்கல்

(வடமராட்சி)

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தில், இந்த வருடம் சுருக்கெழுத்துப் பயிற்சி முடித்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

எனவே, பயிற்சிமுடித்தவர்கள் அனைவரும் - அன்றைய தினம் வந்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுமாறு சுருக்கெழுத்துக் கழகத்தினர் கேட்டுக்கொள்கின்றனர்.

### தேசிய எழுச்சிப் பேரவை செயலகம் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

தேசிய எழுச்சிப்பேரவையின் யாழ். மாவட்டச்செயலகம் - இன்று காலை 9 மணிக்கு கோண்டாவில், இருபாலை வீதியில் திறந்துவைக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சு.சிறில் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் உட்படப் பலரும் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

இன்று திறந்துவைக்கப்படும் தேசிய எழுச்சிப்பேரவை அலுவலகம், தனது பணிகளை இன்று முதல் ஆரம்பிக்குமென யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையினர் தெரிவித்துள்ளனர். (ப)

## அரச அதிபர் தலைமையிலான குழு இன்று மருதங்கேணி செல்கின்றது

மருதங்கேணி மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராயும் பொருட்டு, இன்று யாழ்.அரச அதிபர் தலைமையிலான குழுவொன்று அங்குசெல்லவுள்ளது.

மருதங்கேணி அ.த.க. பாடசாலையில் காலை 10 மணி முதல், மக்களைச் சந்தித்து குறைகள் மற்றும் அந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் அதிகாரிகள் ஆராயவுள்ளார்கள்.

இந்தச் சந்திப்பின் மூலம் அப்பிரதேச மக்களின் அபிவிருத்திக்கான நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்படவுள்ளதாகவும் யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ப)




கௌரவ
**அப்பாத்துரை விநாயகமூர்த்தி**
(பாராளுமன்ற உறுப்பினர்) அவர்களுடைய
**சேவைநலன் பாராட்டுவிழா**

நிகழ்ச்சி நிரல்

19.12.2003 வெள்ளிக்கிழமை இன்று மாலை 3.30 மணி (பு.நே) விழாநாயகர் அவர்களை அன்பர்கள், நண்பர்கள் அணிசேர மங்கள வாத்தியம் சகிதமாக வண்ணை சிவன்கோவிலிலிருந்து ஊர்வலமாக வீரசிங்கம் மண்டபத்திற்கு அழைத்துவருதல்.

**வீரசிங்கம் மண்டபத்தில்**

மங்கள இசை : திரு இ.முருகானந்தம், திரு. பாலமுருகன் குழுவினர்

மங்கள விளக்கேற்றல், தேவாரம்

வரவேற்புரை : திரு. ஆர்.இ.ஆனந்தராஜா (உப தலைவர் - அ.இ.த.கா)

ஆசியுரைகள் : i) ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் (முதல்வர்-நல்லை ஆதீனம்)
ii) அருட்தந்தை சி.ஜெ.ஜெயக்குமார் (யாழ். மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர்)
iii) அருட்கவி சீ.விநாசித்தம்பி M.A (நாகவரதர் தேவஸ்தானம் - அளவெட்டி)

தலைமையுரை : திரு. அ.குமாரவேல் B.A (விரிவுரையாளர் - தலைவர் விழாக்குழு)

பாராட்டுரைகள் : கலாநிதி ந.குமரகுருபரன் (சிரேஷ்ட உப தலைவர் - அ.இ.த.கா)
கௌரவ மாவை சேனாதிராசா பா.உ (தமிழ் தேசிய கூட்டமைப்பு)
கௌரவ மனோ கணேசன் பா.உ (தலைவர் - மேல் மாகாண மக்கள் முன்னணி)

வாழ்த்துரைகள் : பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர் - யாழ். பல்கலைக்கழகம்)
விகடகவி திரு. மு.திருநாவுக்கரசு (முன்னாள் மாவட்ட நீதிபதி)
செஞ்சொற்செல்வர் திரு. ஆறுதிருமுருகன் B.A (ஆசிரியர் - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

சிறப்புரை : மாண்புமிகு பெ.சந்திரசேகரன் பா.உ. (அமைச்சர் - சமூக அபிவிருத்தி அமைச்சு)

பாராட்டு விழா வாழ்த்து மலர் வெளியீடு
முதற் பிரதி வழங்கல், சிறப்புப் பிரதி வழங்கல்

மலர் வெளியீட்டுரை : கலாநிதி சி.சிவலிங்கராஜா (சிரேஷ்ட விரிவுரையாளர் - யாழ். பல்கலைக்கழகம்)

பாராட்டுக்கவிதை : செல்வன் ந.ஐங்கரன்

வாழ்த்துப் பாமாலைகள் வாசித்து வழங்குதல்
விழாநாயகரைக் கௌரவித்தல்

ஏற்புரை : விழா நாயகர்

நன்றியுரை

வயலின் இசை : திரு.அ.ஜெயராமன் குழுவினர் (நாச்சிமார் கோயிலடி)

விழா நிறைவு

(558)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**



**நிறஞ்சனாஸ்** சங்கானை

ரஜனி, மீனா, ரோஜா நடித்த
**வீரா**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
JACKIECHAN நடித்த
**'WHO AM I'** (கராட்டிப் படம்)
(சி-1846)



**ராஜா** யாழ்ப்பாணம்

தருண், த்ரிஷா, விவேக், மணிவண்ணன் நடித்த
**எனக்கு 20 உனக்கு 18**
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1847)



**வரவுசெலவுத் திட்டம் - 2004**

(255ம் அத்தியாயமான) நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 1979ம் ஆண்டின் 13ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 179(3) ஆம் பிரிவின் பிரகாரம் நிர்வாகக் கட்டளை இலக்கம்: 05 10.12.2003 ஆம் திகதிய தீர்மானத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட 2004ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் 19.12.2003ம் திகதி தொடக்கம் ஏழு (07) நாட்களுக்கு அலுவலக நேரத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
18.12.2003

(சி-1902)

மு.செ.சரவணபவ
செயலாளர்,
நகரசபை சாவகச்சேரி


## கிராம சேவையாளர் வெற்றிடம் நிரப்புதல் (ஒப்பந்த அடிப்படையில்)

யாழ். மாவட்டத்தில் புனர்வாழ்வு புனரமைப்பு வேலைகளை துரிதமாக மேற்கொள்வதற்காக சில கிராம சேவையாளர் வெற்றிடங்கள் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவுள்ளன. இதற்காக ஓய்வுபெற்ற கிராம அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிக்கொண்டிருப்பவர்களும் தொடர்ந்து கடமையாற்ற விரும்பின் தங்கள் பிரதேச செயலர் ஊடாக விண்ணப்பிக்கவேண்டும் என்பதை கவனத்திற்கொள்ளவும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்திற்கமைய விண்ணப்பப் படிவங்களை தயாரித்து 2003.12.26 ஆம் திகதிக்கு முன்பதாக யாழ். செயலகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செ.பத்மநாதன்
அரசாங்க அதிபர்
யாழ். மாவட்டம்

**புனர்வாழ்வு புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்காக கிராமசேவையாளர் வெற்றிடங்களை தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் நிரப்புதல்**

01. முழுப்பெயர் -
02 பிறந்த திகதியும் தற்போதைய வயதும் -
03. ஓய்வுபெற்ற திகதி, கிராம அலுவலர் பிரிவு, உ.அ.அ.பிரிவு -
04. ஓய்வுபெற்ற காரணம் - (வயது காரணமாகவா அல்லது 44/90 சுற்றுநிருபத்திலா)
05. கடைசியாகப்பெற்ற அடிப்படைச் சம்பளம் -
06. மீளக்கடமையாற்ற விரும்பும் இடம் -
07. ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில்கடமையாற்றிக் கொண்டிருப்பவராயின் அதுபற்றிய விபரங்கள் -

(சி-1900)

# ஜனாதிபதி தமது கடமைகளை சரிவரச்செய்துகொண்டிருக்கிறார்

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஜனாதிபதி - பிரதமருக்கு அனுமதியளித்திருப்பதன் மூலம் அவர் தனது கடமையை சரிவரச் செய்துள்ளார் என எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற மூன்று அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டு வரவு செலவுத் திட்டவிவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் இலங்கையில் சமாதானம் உருவாகி மக்கள் நிம்மதியாக வாழவேண்டும் என்பதில் ஜனாதிபதியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் உறுதியாகச் செயற்படுகின்ற போதிலும் அதற்கான ஒத்துழைப்பை வழங்க சிலர் மறுக்கின்றனர்.

ஜனாதிபதி சமாதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு பிரதமருக்கு அனுமதியளித்திருக்கின்றமையானது அவரது கடமைகளை அவர் சரியாகச் செயற்படுத்துவதையே காட்டுகின்றது. பொலிஸ் திணைக்களத்துக்குப் பல வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டியுள்ளது. குறிப்பாக நிரந்தரமான பொலிஸ்மா அதிபர் ஒருவர் நியமிக்கப்படவேண்டிய தேவை ஒன்றுண்டு எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

# இராணுவத்தினருக்கு உடற்பயிற்சிக்கூடம் பலாலிப்படைத்தளத்தில் திறந்து வைப்பு!





பலாலி இராணுவத்தளத்திற்கு கடந்த திங்கட்கிழமை விஜயம்செய்த இராணுவத் தளபதியும, கூட்டுப்படைகளின் தளபதியுமான லெப். ஜெனரல் லயனல் பலகல்ல - படையினருககாக விசேடமாக அமைக்கப்பட்ட உடற்பயிற்சிக் கூடம் ஒன்றைத் திறந்துவைத்தார்.

யாழ்.படைகளின் தளபதியாகவிருந்து விலகிச்சென்றுள்ள மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் ஆலோசனையின்பேரில், பலாலியிலுள்ள இராணுவத்தளத்தில் இந்த உடற்பயிற்சிக்கூடம் அமைக்கப்பட்டது.

27 லட்சத்து 69 ஆயிரத்து 375 ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்த உடற்பயிற்சிக்கூடத்தைத் திறந்துவைக்க, இராணுவத்தளபதிக்கு - மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா அழைப்பு விடுத்திருந்தார்.

புதிய உடற்பயிற்சிக்கூடத் தொகுதியை இராணுவப் பொறியியல் பிரிவினரே அமைத்துள்ளனர்.

இந்தத் திறப்பு விழா நிகழ்விற்கு வருகை தந்த இராணுவத்தளபதிக்கு அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்ட அதேவேளை, விடைபெற்றுச்செல்லும் குடாநாட்டுப் படைத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு விசேட இராணுவ அணிவகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் குடாநாட்டில் நிலைகொண்டுள்ள இராணுவப்படைப்பிரிவுகளின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் நூற்றுக்கணக்கான படையினரும் கலந்துகொண்டனர்.

## ஐ.நா.செயலர் பதவிக்கு போட்டியிடும்

# ரிரோன் பெர்னாண்டோவை ஆதரிக்குமாறு வெளிநாட்டுத் தூதுவர்களிடம் கோரிக்கை!

(கொழும்பு)

ஐ.நா. சபையின் அடுத்த செயலாளர் நாயகம் பதவிக்கு போட்டியிடவுள்ள வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோவை ஆதரிக்கவேண்டுமென, இலங்கையிலுள்ள சகல வெளிநாட்டுத் தூதுவர்களையும் அழைத்து, அமைச்சர் மிலிந்த மொறகொட கேட்டுக்கொண்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடந்த இந்தக் கூட்டம்- அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோவின் கோரிக்கைக்கு அமைவாக, அமைச்சர் மிலிந்த மொறகொடவினால் கூட்டப்பட்டது. இதில் அனைத்து வெளிநாட்டுத் தூதுவர்களும் பங்குபற்றியிருந்தனர். அத்துடன் அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோவும் இந்தப் பதவிக்குப் போட்டியிடுவதற்கு மிகவும் ஆர்வமாக உள்ளார்.

இதேவேளை, அமைச்சர் ரிரோன் பெர்னாண டோவை, ஐ.நா.செயலாளர் நாயகம் பதவிக்குப் போடடியிடவைப்பதற்கு முழு அமைச்சர்களும் தமது ஆதரவினைத் தெரிவித்துள்ளனர். ஆனாலும், இவர் போட்டியிடுவதை அறிவிப்பது வெளிவிவகார அமைச்சேயாகும்.

இதேவேளை இவரது இந்தப் பதவிக்கான போட்டி குறித்து ஐரோப்பிய செய்தியாளரான பார்பரா குறோஸ்ரி கருத்துத் தெரிவிக்கையில்-

ஐ.நா.செயலரின் கௌரவமான பதவிக்கு ரிரோன் பெர்னாண்டோ பொருத்தமானவரல்ல. ஆனால், முன்னாள் ஆயுத விவகாரங்களுக்குப் பொறுப்பான ஜயந்த தனபால என்பவரை இந்தப் பதவிக்குப் போட்டியிடச் சிபார்சு செய்யலாமெனவும், இவர்தான் ஆசிய நாடுகள் சார்பாக இநதப் பதவிக்குப் போட்டியிடப் பொருத்தமானவரெனவும், இதன்மூலம் ஐ.நா.சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளும் இவரை ஆதரிப்பார்கள் எனவும் தெரிவித்தார்.

இதனைவிட ஐ.நா.செயலாளருடன் நெருக்கமானவரான சசி தாகூர், சிங்கப்பூரைச் சேர்ந்த கிஷோர் மதுபானி, தாய்லாந்து வெளிநாட்டமைச்சர் சுறின் பிற்சுவானி ஆகியோரும் இந்தப் பதவிக்குப் போட்டியிடவுள்ளனர். ஆசிய நாடுகளின் சார்பில் பெண் ஒருவரைப் போட்டியிடவைப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியான குளோறியா அறோயோவின் பெயரும் சாதமாக உள்ளது.

# சமாதான முயற்சிகளை அமெரிக்கா ஆதரிக்கும்!

## இலங்கைக்கான தூதுவர் தெரிவிப்பு

(அம்பாறை)

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என இலங்கைக்கான அந்நாட்டுத் தூதுவர் ஜெப்றி லன்ஸ்ரீட் தெரிவித்தார்.

அம்பாறையில் யு.எஸ்.எயிட் அமைப்பின் கிளை நிறுவன அலுவலகம் ஒன்றைத் திறந்துவைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

இலங்கையின் அரசியல் விடயங்களில் தலையிடும் எண்ணம் அமெரிக்காவிற்குக் கிடையாது. சர்வதேச சமூகம் இலங்கையில் இடம்பெறும் மாற்றங்களை உன்னிப்பாக அவதானித்துவருகின்றது.

சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக வழங்கப்படும் உதவிகளை மக்களும் அரசியல்வாதிகளும் கூடியவரை சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

விடுதலைப் புலிகள் மீண்டும் போரில் ஈடுபடமாட்டார்கள் என நாம் கருதுகின்றோம். அவர்கள் சில நடவடிக்கைகளை நிறுத்தினால், சமாதான நடவடிக்கைகள் உத்வேகம் பெறும். பயங்கரவாதத்தை முழுமையாகக் கைவிடுவதற்கு விடுதலைப் புலிகள் இணங்கினால், அவர்கள்மீதான தடையை நீக்க அமெரிக்கா தயாராகவுள்ளது.

இனிவரும் காலங்களில் இலங்கையில் நடைபெறும் சகல காரியங்களும் சமாதானததை வலுப்படுத்துவதாக அமைவதையே நாம் விரும்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜே.வி.பியுடன் கூட்டணி அமைத்ததும் நாட்டில் பொதுத் தேர்தல் நடத்தப்படும்!

## அனுரா பண்டாரநாயக்க கூறுகிறார்

(கொழும்பு)



ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் கூட்டுச்சேர்ந்ததும் நாட்டில் பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்படும் என - ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

காலியின் ஊரக்கப்பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது-

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தவும், அபி விருத்தியைக் கட்டி எழுப்பவும் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டியுள்ளது.

ஜே.வி.பியுடன் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி இணைவதற்கான காலம் நெருங்கிவிட்டது, இதற்கான நாள் ஒன்றைத் தீர்மானிக்கும் பணிமட்டுமே எஞ்சியுள்ளது. இரு கட்சிகளும் கூட்டுச்சேர்ந்ததும் தேர்தல் ஒன்று நடத்தப்படும். அதில் அதிக பெரும்பான்மைபெற்று அரசு அமைக்கும் நாம், நாட்டில் சமாதானத்தினை ஏற்படுத்தவுள்ளோம்.

எமக்கு அனைவரினதும் ஆதரவு உண்டு என்பதை நாம் தெளிவாக உணர்ந்துள்ளோம் என அவர அங்கு மேலும் தெரிவித்துள்ளார்.

# சுசந்த பெர்னாண்டோ பதவியை இராஜினாமா

விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் சுசந்த பெர்ணாண்டோ தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

தொழிலமைச்சர் மகிந்த சமரசிங்கவிற்கு நேற்றுமுன்தினம் தனது இராஜினாமாக் கடிதத்தினை இவர் அனுப்பிவைத்துள்ளார்.

ஊழல் மோசடிக் குற்றச்சாட்டின் பிரகாரம் நீதிமன்றத்தால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வரும் சுசந்த பெனாண்டோவை, எதிர்வரும் 26 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

தமக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் நியாயம் அற்றவை எனத் தெரிவித்திருக்கும் அவர் தன் மீதான குற்றச்சாட்டுக்களுக்கான விசாரணைகள் நியாயமான முறையில் நடத்தப்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இவரது பதவிக்கு தொழில், தொழில் வாய்ப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் ஆர்.டி. ஜெயதிலக நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சுசந்த பெனாண்டோவை விடுதலை செய்யக்கோரும் மனுவொன்றை சிலர் உயர்நீதி மன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தேசிய ஊடகக் கொள்கையை தயாரிக்க ஜனாதிபதி அமைத்த குழு முறையற்றது!

## சுனந்த தேசப்பிரிய குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேசிய ஊடகக் கொள்கையை அமைப்பதற்கு நியமிக்கப்பட்ட செயலணி உருவாக்கிய முறை முறைகேடானது.

இவ்வாறு சுதந்திர ஊடக அமைப்பின் இணை அமைப்பாளர் சுனந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

ஜனாதிபதியின் ஆலோசனையின பேரில் அமைக்கப்பட்ட இந்த செயலணி அமைப்புக் குறித்து ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

தேசிய ஊடகக் கொள்கையை தயாரிப்பதற்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட செயலணியின் நோக்கம் தெளிவாக இருந்தாலும், அது நடைமுறைப்படுத்தப்பட்ட முறை குறித்து திருப்தியடையமுடியாது.

இந்த செயலணியின் பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 12 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஊடகத்துறையின் தற்போதைய நிலை குறித்து ஆராய்வதும், புதிய நடைமுறைகள் பற்றிய யோசனைகளை சமர்ப்பித்து வழிகாட்டிகளை முன்வைப்பதுமே இந்தக் குழுவின் யோசனையாகும்.

இந்த நடவடிக்கையினால் புதிய சட்டம் ஒன்று இயற்றப்படமாட்டாது. சகபாடி அரசியல் இருக்கும் சந்தர்ப்பத்தில் இருசாராருக்கும் நியாயம் கிடைக்கக்கூடியவகையில் அமைக்கப்பட்டுள்ளது. விசேடமாக வெளிநாட்டுக்கொள்கைகள், பொருளாதாரம், குற்றச்செயல்கள், தொடர்பாக நாம் பிரிந்து இருந்து செயற்படமுடியாது.

அதனால், இந்தப் பிரச்சினையின்போது நடுநிலையில் இருந்து சிந்திக்க தற்போதைய சூழ்நிலை நல்ல அவகாசத்தை தூண்டியுள்ளது.

செயலணி அமைத்தது நல்ல விடயம். ஆனால், செயலணி அமைப்புச் செய்தமுறை தவறானது. முதலில் இவ்வாறான செயல் ஒன்றை செய்யவேண்டுமானால், அரசாங்கத்தில் உள்ள ஆளுங்கட்சியுடன் கலந்துரையாடி இவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். அவ்வாறில்லாமல், இவ்வாறு தன்னிச்சையாகச் செய்தால், அரசியல் நிலை அதிரடிப்போட்டியாக மாறி, உத்தேசிக்கப்பட்ட குறிக்கோளை அடையமுடியாது.

ஊடக சுதந்திரம் மீது கட்டுப்பாடுகளை விதிப்பது சிரமமான விடயமாகும். ஊடகக் கலாசாரத்தினை முன்னேற்றவேண்டுமானால் புரிந்துணர்வு இருக்கவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### சுகாதார ஊழியர்களின் பிரச்சினை அமைச்சரவையில் அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

சுகாதார ஊழியர்களின் சம்பள முரண்பாடு குறித்த புதிய பிரேரணை ஒன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் சுகாதார அமைச்சு நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது.

சுகாதார ஊழியர்கள் சங்கத்தின் கோரிக்கையை நிறைவு செய்வதற்கு அதிகநிதி தேவைப்படுவதால் இந்த விடயம் குறித்து விரைவில். ஆராய்ந்து சுகாதார ஊழியர்களுக்கானதொரு சரியான தீர்ப்பு வழங்கப்படும் என சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

சுகாதார ஊழியர்கள் தமது கோரிக்கைக்கு சரியான தீர்வு கிடைக்காவிடின் போராட்டத்தை விஸ்தரிக்கபோவதாக அறிவித்திருந்தனர்

இதனையடுத்தே சுகாதார அமைச்சு இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இராணுவ உயரதிகாரிகள் சீனாவுக்கு பயணமாகினர்!

தொண்டர் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தலைமையிலான இராணுவ உயரதிகாரிகள் குழு நேற்றுமுன்தினம் அதிகாலை சீனாவுக்கு சென்றுள்ளது.

இந்தக் குழுவினர் சீனாவில் இருவாரங்கள் தங்கியிருப்பார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்புக்களை ஒழுங்கு படுத்துவதற்காகவும் சீனாவின் இராணுவ உதவிகளைப் பெற்றுக்கொள்ளவும் இந்தக் குழு சீனா சென்றுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

## சாவகச்சேரியில் லொத்தர் மூலம் கடைகள்

சாவகச்சேரி நகரசபையின் பொதுச்சந்தைப் பகுதியினுள் அமைந்த 27 கடைகள் - கடந்த 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நகரசபை வாடிக்கையாளர்களுக்கு லொத்தர் முறைமூலம் வழங்கப்பட்டன.

நகரசபை நிதி, நாள் நிதி என்பவற்றைக் கொண்டு, புதிதாக அமைக்கப்பட்ட கடைகளே, இவ்வாறு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே தென்மராட்சிப் பகுதியில் நடைபெற்ற யுத்த நடவடிக்கைகளால், முற்றாக பாதிக்கப்பட்டிருந்த சந்தை, தற்போது புனரமைக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (29)

## சத்திரசிகிச்சை கற்கை நெறி

# மீள ஆரம்பிக்கப்படும் வரைக்கும் மாணவர் போராட்டம் தொடரும்

### மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

யாழ்.மருத்துவ பீட மாணவர்கள் யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தின் அசமந்த போக்கிற்கு எதிராக பகிஷ்கரிப்பு போராட்டம் ஒன்றை நடாத்தியதுடன் அதன் பகுதியாக மருத்துவபீடமும் மாணவர்களால் மூடப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பாக கூட்டப்பட்ட பல்கலைக்கழக அவசர பேரவை கூட்டத்தில், எடுக்கப்பட்ட முடிவுகள் - அனைத்தும் மாணவர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அத்துடன், சத்திர சிகிச்சை கற்கை நெறியானது தொடர்ந்து நடத்தப்படுவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்வதாக, பீடாதிபதியினால் உறுதி வழங்கப்பட்டுள்ளதாகவும்,

சத்திர சிகிச்சை கற்கை நெறி சீராக மீள ஆரம்பிக்கப்படும் வரைக்கும், மருத்துவபீடம் தொடர்ந்தும் மூடப்பட்டு, மாணவர் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் எனவும் மருத்துவபீட மாணவர்கள் ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர்.

## பொதுநூலகம் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேசசபையினால், கைதடிப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட பொது நூலகம் - நாளை காலை 11 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

பிரதேச செயலாளர் ந. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக - யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், யாழ்.செயலக புனர்வாழ்வு திட்டமிடல் பணிப்பாளர் பு.சுந்தரம் பிள்ளை மற்றும் ஐக்கிய நாடுகள் தூதுவராலய பிரதிநிதி, யாழ். பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (34)

## வருடாந்த இடமாற்றத்தின்படி

# நெடுந்தீவு உதவி அரச பணிமனைக்கு மூன்று பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்

2004 ஜனவரி முதல் செயற்படும் வகையில், மேற்கொள்ளப்பட்ட வருடாந்த இடமாற்றத்தின் பிரகாரம் - நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு மூன்றுபேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு எழுதுநர்களும், ஒரு தமிழ் தட்டெழுத்தாளரும் இடமாற்றம் பெறுகின்றனர்.

கடந்த பல வருடங்களில். பின்னர், தற்போதே இந்தப் பணிமனைக்கு ஒரு தட்டெழுத்தாளர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் பணியாற்றிய இரு எழுதுநர்கள் - சங்கானை, ஊர்காவற்துறை செயலகங்களுக்கு மாற்றமாகிச் செல்லவுடன், இங்கு பணியாற்றிய கணக்குப் பதியுனர் - கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் இடமாற்றம்பெற்றுச் சென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (113)

# நெடுந்தீவு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேசசெயலகப் பிரிவுக்கான, மாதாந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் - எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் - உதவி அரசாங்க அதிபர் ச.பேரானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் உலர் உணவு விநியோகம், சுகாதார சேவைகள், கல்விச்சேவைகள், போக்குவரத்துச் சேவைகள், மின்விநியோகம், வீதி அபிவிருத்தித் திணைக்கள வேலைகள், குடிநீர் விநியோகம், மீன்பிடி, கமநல சேவைகள் மற்றும் பிரமாண அடிப்படையிலான சேவைகள், பன்முகப்படுத்தப்பட்ட மாற்றீட்டு வேலைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

இந்த வருடத்திற்கான இறுதி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டமாதலால் - இதில் பல தீர்மானங்கள், செயற்பாடுகள் முன்னெடுக்கப்பவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# குப்பை கொளுத்திய சிறுவன் தீக்காயங்களுக்கு உள்ளானார்

குப்பை கொழுத்திய சிறுவன் மீது தீப்பற்றி, உடல் முழுவதும் எரிகாயங்கள் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றைய தினம் காரைநகர், கோவளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தின்போது - நா.ஜெனாகரன் (வயது 14) என்பவரே எரிகாயத்துக்கு இலக்கானார்.

இந்தச் சிறுவன் தனது வீட்டில் உறவினர்கள் எவரும் இல்லாத வேளையில், வீட்டுக் குப்பையை எரித்துள்ளார். குப்பை எரித்து கொண்டிருந்தசமயமே, அவர் உடல் முழுவதும் தீப்பற்றி உள்ளது. எரிகாயத்துக்கு உள்ளான சிறுவன் - யாழ்.போதான வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றார்.

# கள் விலை அதிகரிப்பினால் விற்பனையாளர்மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கள் விலை அதிகரித்தமையாயினால், விற்பனையாளர் - வாடிக்கையாளர்களினால் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றைய தினம ஓட்டுமடம் பகுதியில் இடம்பெற்றுளளது. இந்தச் சம்பவத்தின்போது, கள் விற்பனையாளரான சி.நித்தியானந்தராசா (வயது 48) என்பவரே தாக்கப்பட்டவராவார்.

தவறணையில் ஒரு போத்தல் கள் - 25 ரூபாவாக விற்கப்பட்டது. நேற்று முன்தினம் தொடக்கம் முப்பது ரூபாவிற்கு விற்கப்பட்டது.

கள்ளை விலைகூட்டி விற்ற காரணத்தினால், தவறணை விற்பனையாளரிடமிருந்து கள் வாங்கிக் குடித்துவிட்டு, அந்தப் போத்தலை உடைத்து வாடிக்கையாளர்கள் - விற்பனையாளரைப் பலமாகத்தாக்கியுள்ளார்கள். தாக்கப்பட்ட விற்பனையாளர் - யாழ்.போதனா வைத்தியசாலை தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக - வைத்தியசாலைப் பொலிஸார் விசாரணைகள் மேற்கொள்கின்றார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
மூன்றாவது அகவையில்

பெயர் : பா.சரண்ஜா
முகவரி : காளிகோயிலடி, வட்டுக்கோட்டை.

## சின்னஞ்சிறு செய்திகள்

### தலைமைத்துவ பயிற்சிநெறி

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தலைவர்களுக்கான, கிராம அபிவிருத்தித் திணைக்களம் - தலைமைத்துவப் பயிற்சி நெறியினை, எதிர்வரும் 22, 23, 24 ஆம் திகதிகளில் - சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடாத்தவுள்ளது.

இந்த நிகழ்வில் - அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். ஆரம்ப நிகழ்வுகள் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (34)

### மாணவர் உதவிப்பணம் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக முதலாம் வருட மாணவர்களுக்கான உதவிப் பணக் கொடுப்பனவுக்குத் தேவையானோர் - யாழ்.பல்கலைக்கழக இலங்கை வங்கிக் கிளையில், அவற்றைப் பெற்றுக்கொள்ள ஆவன செய்யப்பட்டுள்ளதாக, யாழ். பல்கலைக்கழக நலச்சேவைகள் உதவிப்பதிவாளர் அறிவித்துள்ளார்.

### பன்றித்தலைச்சி அம்மன் வருடாந்த உற்சவம்

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு பன்றித்லைச்சி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் - எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 6 ஆம் திகதி ஒன்பதாம் நாள் இரதோற்சவமும், மறுநாள் திருவாதிரை தினத்தன்று தீர்த்தோற்சவமும் இடம்பெற்று, மாலை கொடி இறக்கத்துடன் மஹோற்சவம் நிறைவுபெறும். (24)

### இலவச வழிகாட்டல் வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

பரீட்சைக்குத் தோற்றும் திறந்த, மட்டுப்படுத்திய பரீட்சாத்திகளுக்கான இலவச வழிகாட்டல் வகுப்புக்கள் - அனுபவமும், திறமையும் வாய்ந்த அரசாங்க திணைக்கள கணக்காளரினால், நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

இந்த வகுப்பில், ஆர்வமுடையவர்கள் பங்குபற்றிப் பயனடையுமாறும் கச்சேரியின் கணக்காளர் சுதேஷ்குமார் அறிவித்துள்ளார்.(44)

### மாடியிலிருந்து தவறி வீழ்ந்த மாணவி காயம்

மூன்றாவது மாடியில் இருந்து தவறி வீழ்ந்ததில் மாணவி ஒருவர படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் - பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி விடுதியின் மூன்றாம்மாடியில் இருந்து தவறி வீழ்ந்ததில், கட்டுடை மானிப்பாயைச சேர்ந்த எஸ்.சோபிகா (வயது 12) என்ற மாணவி படுகாயம் அடைந்தார். இவர் சங்கானை வைத் திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு கிசிச்சைப் பெற்று வருகின்றார். (121)

# கண்ணாடித் தொழிற்சாலை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை

### ஊழியர்கள் கவலை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அமைச்சர்கள், அரச அதிபர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலருக்கும் எமது நிலை தொடர்பாக தெரியப்படுத்தியபோதும், ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லையென, நீர்வேலி சேவி கண்ணாடித் தொழிற்சாலை பாதிக்கப்பட்டோர் ஊழியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும், கடந்த இருபது வருடமாக நாட்டிலே ஏற்பட்ட கொடிய போரின் காரணமாக - எமது தொழிற்சாலையை இழந்தது மட்டுமல்லாமல், எமது தொழிலையும் நாம் இழந்துள்ளோம். இந்த நிலை தொடர்பாகப் பலருக்குத் தெரியப்படுத்தியபோதும், இதுவரை எதுவித உரிய நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பாக எமது கவலையை தெரிவித்துக் கொள்கின்றோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கஞ்சா வைத்திருந்த நபர் காவல்துறையினரால் கைது

(கிளிநொச்சி)

வடமராட்சிக் கிழக்கு நித்திய வெட்டை - முள்ளியான் பகுதியில் இரண்டு கிலோ நிறையுடைய கஞ்சா போதைப் பொருளுடன், நபர் ஒருவர் தமிழீழக் காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தமிழீழ காவல்துறையினரின் அதிரடிச் சோதனை நடவடிக்கையின் மூலம், நேற்றுமுன்தினம் இந்த நபர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.


கிளிநொச்சியிலுள்ள - மாவட்ட தமிழீழ நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது, சந்தேக நபரை ஜனவரி மாதம் 2 ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு நீதியாளர் உத்தரவிட்டார்.

# விதவைகளுக்கான சுயதொழில் கடன்

நெடுந்தீவு பிரதேசசெயலர் பிரிவில் உள்ள, தெரிவுசெய்யப்பட்ட விதவைகளுக்கு பட்டினிக் கெதிரான நிறுவனத்தினால், சுய தொழில முயற்சி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது.


இதன் முதற்கட்டமாக - 09 குடும்பங்களுக்கு கோழிவளர்ப்புக்கென 16 கோழிக்குஞ்சுகளும், 50 கிலோ கிராம் கோழித் தீனியும், கோழிக்கூடு மற்றும் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளதுடன் - கோழி, ஆடு வளர்ப்பு உதவி பெறுபவர்களுக்கான பயிற்சிப்பட்டறையும் நடைபெற்றதுடன் - 18ஆம், 23 ஆம் திகதிகளில் 26 குடும்பங்களுக்கு கோழி வளர்ப்புக்கான உதவிகளும், 17 ஆம் திகதி ஆடு வளர்ப்பிற்கான கொட்டில்கள் அமைப்பதற்கான தடிகளும் வழங்கப்பட்டுள்ளன.

பட்டிக்கெதிரான இயக்கத்தினரின் உதவியினால் கோழி வளர்ப்புக்கு 35 குடும்பங்களும், ஆடு வளர்ப்புக்கு 11 குடும்பங்களும் தெரிவு செய்யப்பட்டு உதவிகள் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.(113)



அண்மையில் - யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் இடம்பெற்ற சைவ சமய விழாவில் கலந்துகொண்ட - யாழ்.கல்வி வலயப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பிப்பதையும், அருகில் யாழ்.கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.தங்கராசா நற்பதையும் படத்தில் காணலாம்.

யாழ்ப்பாணம்.




# கருத்துக்களை வெளிப்படுத்த அஞ்சாமல் எழுத்துருவம் கொடுத்தல் வேண்டும்

*தாட்சாயினி என்ற புனைபெயருடன் ஈழத்தின் எழுத்தாளராக வளர்ந்து வருகின்ற சாவகச்சேரியைச் சேர்ந்த இளம் எழுத்தாளர் ச.பிரேமினியுடன் சிநேகிதியே பக்கத்துக்காகக் கருத்துக்களை பகிர்ந்து கொண்டோம்.*

**நீங்கள் எழுத்தாளராக வருவதற்குத் தூண்டிய விடயங்கள் எவை?**

பாடசாலையில் கல்வி கற்கின்றபோது, தமிழ்த்தினப் போட்டிகள், கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி, சிறுகதைப்போட்டிகளில் பங்குபற்றும்போது ஆர்வம் ஏற்பட்டது. அதனோடு போட்டிகளில் வெற்றி பெறப்பெற, எழுதவேண்டும் என்ற ஆர்வமும் ஏற்பட்டது.

சிறுவயது முதலே புத்தகங்களை வாசிக்கும் காரணத்தால், அந்தச் சிறுகதைகளை எழுதியவர்களைப் போலவே நானும் சிறுகதைகளை எழுதவேண்டும், எழுத்தாளராக வரவேண்டும் என்று என்னைத் தூண்டியது.



ச.பிரேமினி

**புத்தகங்களை வாசித்தீர்கள் என்று கூறினீர்கள், எந்த வகையான புத்தகங்களை அதிகம் வாசிப்பீர்கள்?**

ஒவ்வொரு வகையிலேயும் ஒவ்வொரு எழுத்தாளர்களின் புத்தகங்களைத் தேடித் தேடி வாசிப்பது உண்டு. அம்புலிமாமா, விக்கிரமாதித்தன் கதைகளிலிருந்து வாசிக்கத் தொடங்கினேன். வயதும், எழுத்து ஆர்வமும் வளரவளர எது நல்ல எழுத்து என்று தெரிந்தெடுத்து வாசிக்கக்கூடிய பக்குவம் ஏற்பட்டது.

இலங்கையில் கோகிலா மகேந்திரன், ரஞ்சகுமார் ஆகியோரின் - எழுத்துக்கள் இந்தியாவில் சூடாமணி லா.சா.ராமாமிர்தம் போன்றவர்களின் எழுத்துக்களை வாசிப்பதுண்டு. இப்போதும் அத்தகைய எழுத்துக்களைத் தேடிப்படிப்பதுண்டு.

**இந்தியா, இலங்கை ஆகிய எழுத்தாளர்களின் எழுத்துக்களை வாசித்திருக்கின்றீர்கள். இவற்றில் உங்களுக்குப் பிடித்த எழுத்துக்களாக எதைக்குறிப்பிடுவீர்கள்?**

ரஞ்சகுமார் எழுதிய கோசலை என்ற சிறுகதை கூடுதலாகப் பிடித்திருக்கிறது. இலங்கை எழுத்தாளர்கள் யதார்த்த நிலையைச் சுட்டுகின்றவகையில் சிறுகதைகளை எழுதுகின்றார்கள்.

இந்திய எழுத்தாளர்கள் ஆரம்பகாலத்தில வாசித்தவையெல்லாம் கற்பனை கலந்து எழுதப்பட்டவை என்பதோடு, இப்போது தேடி வாசிக்கும்போது நல்லவையாக இருந்தாலும், நான் வாசித்த இந்தியக் கதைகள்- இலங்கை எழுத்தாளர்களோடு ஒப்பிடும் வகையில் யதார்த்தமாக இருக்கவில்லை என்றுதான்கூறவேண்டும். தற்போது இந்திய எழுத்துக்களை வாசிக்கும்போது, அவற்றில் நலல எழுத்துக்கள் இருக்கின்றது என்பதை அறியக்கூடியதாகவுள்ளது.

சில எழுத்துக்களில் உச்சமான பல இடங்கள், நாங்கள் எங்கே போகவேண்டும் என்பதைக் கூறுகின்ற வகையில் உள்ளன.

**இந்திய எழுத்தாளர்களில் உங்களுக்குப் பிடித்த எழுத்தாளர் என்பதோடு, பிடித்த சிறுகதை பற்றியும் கூறமுடியுமா?**

'சூடாமணி' என்ற பெண் எழுத்தாளர் எழுதிய கதை ஒன்று எனக்கு ஞாபகம் வருகின்றது. வியாழக்கிரகமும், ஒரு பெண்ணின் வாழ்க்கையும் தொடர்பான ஒரு கதை அது.

ஒரு பெண்ணின் திருமணம் தடைப்பட்டுப் போவதற்கு, ஒரு கிரகம் எவ்வாறு காரணமாய் இருக்கின்றது என்பதை விளக்கி எழுதப்பட்ட கதை அது.

**நீங்கள் கூடுதலாக என்ன மாதிரியான சிறுகதைகளை எழுதியுள்ளீர்கள்?**

நான் சிறுகதைகளை எழுதத்தொடங்கிய காலத்தில் 89, 90 களில் போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலம். அப்போது போராட்டத்திற்கு ஆதரவாக நான் கதைகளை எழுதினேன்.

சமூக அடக்குமுறைக்கு எதிராகவும், மனிதாபிமான அடிப்படையிலும் எழுதுவதுதான் என்னுடைய நோக்கம். அநேகமாகப் பெண்ணியம் சார்ந்து எழுதவேண்டி வந்திருக்கின்றது. சமுக அடக்குமுறை என்னும்போது, பெண் அடிமைத்தனத்துக்கு எதிராக அவர்களுக்குச் சார்பாக எழுதவேண்டி ஏற்படுவதுணடு.

**நீங்கள் முதன்முதலில் எழுதிய சிறுகதை எது? அது முதல்முறை வெளியாகும்போது உங்கள் உள்ளத்தில் என்னமாதிரியான எண்ணங்கள் தோன்றின?**

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் படிக்கும் போது, ஒரு சிறுகதைப்போட்டி நடைபெற்றது. தமிழ் மன்றத்தின் ஆதரவில் நடந்த அந்தப் போட்டியில் பரிசுகிடைத்தது. அந்தக் கதைக்கு பெயர் 'மேகங்கள் நிற்பதில்லை' என்பது அந்தக்கதை. அதன்பின்பு கவிதைகளையே எழுதிக்கொண்டு வந்தேன்.

பி.பி.ஸி. ஒரு போட்டி ஒன்று வைத்தது, 'இளங்கவிஞர் தேர்வு' என்று அந்தப் போட்டியில் எனக்கு ஆறுதல்பரிசு ஒன்று கிடைத்தது. 93 ஆம் ஆண்டு கம்பன் கழகத்தினால் நடத்தப்பட்ட கவிதைப்போட்டி ஒன்றில், அதேசமயம் 3 ஆம் பரிசு கிடைத்து, எனக்கு தங்கப்பதக்கம் ஒன்று கிடைத்தது. அந்த இரண்டும்தான் பரிசுகள் என்று சொல்லி முதல் எழுதிப்பரிசு பெற்றது.

பின்னர் சுபமங்களாவின் ஆசிரியர் கோமல் சுவாமிநாதன் இலங்கைக்குச் சிறப்புப் பயணம் செய்தபோது, என்னிடம் சொன்னார் - அவரின் கவிதையைக் காட்டிலும் என்னுடைய கவிதை பிடித்திருப்பதாக - இதில் என்ன சிறப்பு என்றால், பி.பி.ஸி. தமிழோசை நடத்திய கவிதைப் போட்டியில், அவருடைய கவிதை முதல் பரிசு பெற்றிருந்தமைதான். இந்த விடயம் பற்றி சுபமங்களாவிலும் அவர் எழுதியிருந்ததாகக் குறிப்பிட்டார்.

பின்னர் அவர் இந்தியாவிற்குச் சென்றபோது, என்னுடைய கவிதை ஒன்றையும் வாங்கிச் சென்று, தன்னுடைய சுபமங்களா பத்திரிகையில் பிரசுரித்துள்ளார். இது பள்ளிக்கூட மட்டத்தில் கிடைத்த பரிசு.

தியாகி தீலீபன் நினைவாக நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில், எனக்குப் பரிசு கிடைததது. 1994 ஆம் ஆண்டில் புலிகளின் குரல் நடாத்திய ஆண்டு நிறைவு சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு கிடைத்தது. அந்தக் கதைகள் அச்சில் வரவில்லை. அவை தற்போது தொலைந்தும்விட்டன. 'ஒரு புல்லாங்குழலும் புலி வீரனும்' என்ற கதை ஈழநாதம் நடத்திய சிறுகதைப் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்றது. இலக்கிய விழா ஒன்று அந்த நேரத்தில் நடந்தது. நான் சாவகச்சேரியிலிருந்து அந்த விழாவிற்கு வரவில்லை. அந்த விழாவில் 'சொக்கன்' கூறியிருக்கிறார்- மூன்றாம் பரிசுபெற்ற இந்தக் கதை உண்மையில் சிறப்பானது என்று. அவரின் கருத்து எனக்குக் கிடைத்ததும் - என்னுடைய சிறுகதையில் தரமிருக்கின்றது என்ற உத்வேகம் வந்தது. பிரேமினி என்ற பெயரில்தான் முன்னர் நான் எழுதிவந்தேன்.

தாட்சாயினி என்ற பெயரில் 'ரங்கநாதனும் ரஞ்சித் பேரோவும்' என்ற பெயரில் தினகரனில் எழுதினேன். இது இரண்டாவது கதையாகும். அதற்கு முதல் 'ஓ என் அழகிய கிராமமே' என்ற கதை எழுதினேன். தொடர்ச்சியாக பல பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்குக் கதை எழுதி வருகிறேன்.

**உங்களுடைய மறக்கமுடியாத சம்பவங்கள் அப்படியான ஏதேனும் உணர்வுகளை வைத்து சிறுகதைகளை எழுதியுள்ளீர்களா?**

அப்படிக் கருதவில்லை. ஆனால், எங்காவது காண்கின்ற காட்சி மனதைத் தட்டும், இப்படி இருந்தால் என்ன என்று அவற்றை எழுதுவேன்.

'சோதனை நிகர்' என்னும் சிறுகதையை அந்தநேரம் எழுதியிருந்தேன். சோதனைச் சாவடிகளை வைத்து எழுதியிருந்தேன். சோதனைச் சாவடியில் ஒரு பெண்ணுக்கு - பெண் சிப்பாயால் ஏற்படுகின்ற சோதனையைத்தான் இக் கதையில் வெளிப்படுத்தியிருந்தேன்.

'தாயகம்' என்ற இதழில் பெண் என்ற கதையை எழுதியிருந்தேன். அது மிகவும் நேசிக்கப்பட்ட கதை. சிப்பாய் பெண்ணை ஆதரிக்கும் வகையில், அந்தக் கதையை எழுதியிருந்தேன். விடுதலைப் போராட்டம் நடைபெற்றக்கொண்டிருந்த நேரத்தில் சிப்பாயை ஆதரித்து எழுதுவது சரியோ என்று கேட்டார்கள்.

அதற்கு நான் காட்டிய காரணம் என்னவென்றால் - நான் முதலில் எதிர்த்து எழுதிய வேளையில், மனிதாபிமானத்தைத்தான் சுட்டினேன். தற்போதும் அதனைத்தான் குறிப்பிடுகிறேன்.

**எழுத்தின் வளர்ச்சிக்கு உங்கள் குடும்பத்தின் ஒத்துழைப்பு எப்படி வந்தது?**

எனது தாத்தா ஒரு பண்டிதர். அவரிடம் கவிதைகள் எழுதுகின்ற ஆற்றல் உள்ளது. வீட்டிலும் சகோதரர், பெற்றோர் ஆகியோரிடம் ஆதரவு உள்ளது.

**நீங்கள் ஒரு எழுத்தாளர் என்றவகையில் சமூகத்தில் இருந்து ஏதாவது எதிர்ப்பு ஏற்பட்டிருக்கின்றதா?**

அப்படி ஒருநிலை வரவில்லை. மற்றவர்களின் கருத்துக்களைவிட, என்னுடைய கருத்துக்களை முன்னெடுத்துச் செல்வதையே பிரதானமாகச் சொல்கிறேன்.

நான் மனிதாபிமானத்துடன் அடக்குமுறைகளுக்கு எதிராக எழுதுகின்றேன். எவ்வாறான அடக்குமுறைகள் என்று கொண்டாலும் அவற்றுக்கு எதிராக நான் எழுதுகின்றேன்.

**இந்தியாவோடு ஒப்பிடும்போது, ஈழத்துப் பெண் எழுத்தாளர்கள் மிகக்குறைவு. அதற்கு என்ன காரணம் என்று நினைக்கின்றீர்கள்?**

மற்றவர்களின் கருத்துக்களுக்கு முன்னுரிமை கொடுத்து தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு பயப்படுகின்றார்கள் எனறு கருதுகின்றேன்.

**பெண் எழுத்தாளர்கள் சிலர் இலை மறை காயாக உள்ளனர். அவர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

பயப்படாமல் தமது ஆற்றலை தங்கள் கருத்துக்களோடு சேர்த்து, சொல்லவேண்டும். அப்படியெனின் நல்ல இடத்துக்கு அவர்களால் வரமுடியும்.

நான் முதலில் பாடசாலை மட்டத்தில் இருந்துதான் எழுதத்தொடங்கினேன். தற்போதும் எழுதிக்கொண்டிருக்கிறேன். சிலர் பாடசாலை மட்டத்தில் போட்டிகளுக்காக மட்டும் எழுதுவார்கள், வெற்றிபெறுவார்கள் அவர்களிடம் நிறைய திறமை உள்ளது. ஆனால், பாடசாலை, பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு வெளியே வந்ததும், அவர்கள் எழுதுவதை நிறுத்தி விடுவார்கள். அவர்கள் தொடர்ந்தும் எழுதவேண்டும் என்பதே எனது விருப்பம்.

மகளிருக்கு மட்டும் போட்டிகள் வைக்கப்படுகின்றது. ஆனால், என்னைப் பொறுத்தவரையில் அந்தப் போட்டிகளில் பரிவு காட்டக்கூடாது. ஆணுக்குப் பெண் சமம் என்று சொல்லிக்கொண்டு, அதில் மட்டும் ஏன் பிரிவு காட்டுகின்றோம். இவர்களுக்கும் சேர்த்து வைத்தால் நல்லது.

பெண்கள் தினம் முதலியவற்றில், பெண்களுக்கு மட்டும் என்று போட்டிகளை வைக்கலாம். அப்படியான போட்டிகளில் பெண்களிடையே எழுத்தார்வத்தை வளர்க்கமுடியும்.

**இதுவரை எத்தனை கவிதை, கதைகளை எழுதியுள்ளீர்கள்?**

50, 60 கவிதைகள் எழுதியுள்ளேன். ஆனால், அவ்வளவும் வெளிவந்தது என்றில்லை. மனதில் தோன்றியவற்றைக் கவிதையாக்கி வைத்துள்ளேன் அதன் தராதரம் எனக்குத் தெரியவில்லை. எழுபது, எண்பது கதைகளை எழுதியுள்ளேன். அவற்றை தொகுக்கும் முயற்சிகளை மேற்கொள்கின்றேன்.

**ஈழத்து எழுத்தாளர்களில் சிறந்த பெண் எழுத்தாளராக யாரைக் கருதுகிறீர்கள்?**

கோகிலா மகேந்திரன், தாமரைச்செல்வி ஆகியோரைக் குறிப்பிடலாம்.

அவுஸ்திரேலியாவில் விக்ரோரியா - தமிழ்ச் சரிதம் நடத்திய வெளியில் வாழ்பவர்கள் என்றவகையில் சில கதைக்கு பரிசு கொடுத்தார்கள். அவற்றில் என்னுடைய கதையும் ஒன்று.

ஏகலைவன், தாயகம் ஆகிய சஞ்சிகைகளிலும் எழுதியுள்ளேன்.

**எதிர்காலத்திலும் எழுத்துலகில் உங்கள் பங்களிப்பு எவ்வாறாக இருக்கும்?**

திருமணத்தின் பின்னரும் எழுதிக்கொண்டே இருப்பேன் எவ்வளவு அதிகமோ, குறைவோ என்பது பின்னர்தான் தெரியும்.

தொடர்கதைகளை எழுதுகின்ற திட்டமும் உள்ளது.

**நீங்கள் தொடர்ச்சியாக எழுதுவதற்கு ஊக்கமளித்தவர்கள் பற்றிக் கூறுவீர்களா?**

பாடசாலை மட்டத்தில் என்னுடைய ஆசிரியர்கள் தந்த உற்சாகத்தைக் குறிப்பிடலாம். சாவகச்சேரி இந்துக்கல் லூரியில் இருந்த ஆசிரியர்கள் முக்கிய மாகப் பாராட்டும், ஊக்கமும் தந்தார்கள் என்று கூறலாம்.

மற்றவர்களின் பாராட்டுக்களும் அதிகமாகக் கிடைத்தது. பல்கலைக் கழகத்திலும் அவர்கள் எனக்கு நிறைய ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

**தற்போது இளம்சந்ததியினரிடையே எழுத்தார்வம் குறைவாக இருப்பதற்கான காரணம் என்ன?**

சினிமா, நாடகத்தொடர்கள் இருப்பதால் தற்போதைய சிறுவர்கள் வாசிப்புத் திறன் குறைவடைகின்றது. அதனால், எழுத்துத்திறனும் குறைவடைந்து செல்கின்றதைக் காணலாம்.

**எவ்வாறான சூழ்நிலையில் உங்களுக்கு எழுதத்தோன்றும்?**

நான் தனிமையில் இருந்துதான் எழுதுகின்றேன் எழுதும்போது, ஒரு பிரச்சினை வந்ததில்லை.

எழுதும்போது, ஒரு 'மூட்' வந்தால்தான் எழுதலாம். அந்த 'மூட்' போய்விட்டால் எழுதமுடியாது போய்விடும்.

நேர்காணல் - கலானந்தி, உஷா.

## வெண்டிக்காய் சாப்பிடுங்கள்



மற்றைய காய்கறிகளில் இல்லாத ஒரு சத்து வெண்டிக்காயில் இருக்கிறது. அதுதான் 'பொஸ்பரஸ்' சத்து.

மூளை வளர்ச்சிக்குப் 'பொஸ்பரஸ்' வேண்டும். அடிக்கடி வெண்டிக்காய் சாப்பிட்டால், நினைவாற்றல் பெருகும். எனவே, மாணவ - மாணவிகளுக்கு அடிக்கடி வெண்டிக்காய் கொடுங்கள்.

வாரம் ஒரு நாளாவது வெண்டிக்காய் சேர்த்துக்கொள்ளவேண்டும். வெண்டிக்காயில் சாம்பார், கூட்டு, பொரியல் செய்யலாம்.

வீட்டில் இடமிருந்தால், பத்து வெண்டிச்செடிகளை வளர்க்கலாம். நாள்தோறும் வெண்டிக்காய்ப் பிஞ்சுகளைப் பறித்து, பச்சையாகச் சாப்பிடலாம்.

எல்லாவற்றையும்விட, இது சிறந்தது.

அடிக்கடி வெண்டிக்காய் சாப்பிட்டால், முதுமையிலும் நினைவாற்றல் இருக்கும்.

# பழங்களை எப்படி வெட்டிச் சாப்பிட வேண்டும்

பழங்களை, முழங்கையெல்லாம் சாறுவடிய ருசித்துச் சாப்பிட்ட அனுபவம் நம்மில் பலருக்கு உண்டு. இப்படி வழிந்தோடும் சாற்றின் வழியாகவும், பழத்தின் தோலை நீக்கிச்சாப்பிடும்போது, விற்றமின்கள் போன்ற பல்வேறு சத்துகளையும் நாம் இழந்து கொண்டிருக்கின்றோம்.

ஒவ்வொரு பழத்தையும் சாப்பிடவும், அதனைப் பதப்படுத்தவும் சிறந்தவழி முறைகள் இருக்கின்றன. அந்த முறைப்படி சாப்பிட்டால்தான், பழத்தின் மொத்த சத்துக்களையும் நாம் முழுமையாகப் பெறமுடியும் என்கின்றார்கள் உணவு நிபுணர். எந்தெந்தப் பழங்களை எப்படிச் சாப்பிடவேண்டும் என்பது பற்றிப் பார்ப்போம்.



## மாம்பழம்

நம் எல்லோருக்கும் விருப்பமானது மாம்பழம். அதன் கன்னங்களை வெட்டி, கரண்டியால் சதையை ஒட்டவழித்துச் சாப்பிடவேண்டும். அல்லது படத்தில் காட்டியதுபோல, சதைப்பகுதியை சிறுசிறு சதுரங்களாக வெட்டியெடுத்துச் சாப்பிடலாம். சிறிதளவு பால் மற்றும் சீனி சேர்த்து, மில்க்ஷேக் செய்து சாப்பிடலாம். புளிப்பு மாங்காய்களை சட்னி செய்து சாப்பிட்டால் சுவையோ சுவைதான்.

நல்ல மஞ்சள் நிறத்தில் இருந்தாலும், சில மாம்பழங்கள் சுவையாக இருப்பதில்லை. வெளித்தோல் பச்சையாக இருந்தாலும், சில பழங்களில் இனிப்பாக இருக்கும். அதனால், மாம்பழத்தை முகர்ந்து பார்த்துத்தான் வாங்கவேண்டும்.

## அன்னாசிப்பழம்

அன்னாசிப்பழங்களை வட்டமான வடிவில் வெட்டிச் சாப்பிடுவது எல்லோருக்கும் தெரியும். படத்தில் காட்டப்பட்டதுபோல, அன்னாசிப்பழத்தை நீள்வரிசையில் வெட்டி, இலை, தோல் மற்றும் கண்களை நீக்கிவிடுங்கள். இன்னும் மெல்லிய நீளவடிவாக வெடடிச்சாப்பிடலாம். மிளகு தூள் இதறகு மேலும் சுவை கூட்டும். அன்னாசிப் பழத்தில் மில்க்ஷேக் செய்து சாப்பிடலாம்.

இலைப்பகுதியும், மேற்தோலும் கருகி இருந்தால், அன்னாசிப்பழத்தை வாங்காதீகள். பழத்தை அப்படியே குளிர்சாதனப் பெட்டியில் வைக்காமல் துண்டுகளாகவே பத்திரப்படுத்தி வைக்கவேண்டும்.



## அப்பிள்

அப்பிள்பழங்கள் குறிப்பிட்ட காலப்பகுதியில்தான் கிடைக்கும். இதை (தோல்நீக்கி) அவனில் போட்டு உலர்ந்த அப்பிளாக (**Dried Fruit**) செய்து பத்திரப்படுத்திச் சாப்பிடலாம். வேகவைத்து மசித்தும் சாப்பிடலாம். சிலருக்குத் தோலைச்சீவி எடுத்த பிறகுதான் பழத்தைச் சாப்பிடப்பிடிக்கும். அப்படிப் பட்டவர்கள் தோலை மெலிதாகச்சீவி எடுத்துவிட்டுச் சாப்பிடலாம். தோல்சீவியதும் அப்பிள்பழம் கறுத்துவிடும். அப்படி நிறம்மாறாமலிருக்க அதை எலுமிச்சைச்சாறு கலந்த தண்ணீரில் போட்டு எடுத்தால் நிறம்மாறாது.

நிறம் மாறும் எந்தப் பழங்களையும் இப்படி எலுமிச்சைப் பழச்சாறு கலந்த நீரில் போட்டு விட்டால் அது கறுக்காது. மணந்து பார்த்துத்தான் அப்பிள்பழத்தை வாங்க வேண்டும். கெட்டியாக இருப்பதைப் பார்த்து வாங்குங்கள். இரண்டொரு தினங்களில் சாப்பிடப்போவதாக இருந்தால், பொலித்தீன் கவரில்போட்டு குளிர்சாதனப் பெட்டியில் வைக்கலாம்.



## பேரீச்சம்பழம்

இரும்புச்சத்தை அதிகமாகக் கொண்டது பேரிச்சம்பழம். இதை அப்படியே சாப்பிடலாம். மில்க்ஷேக்காகவும் சாப்பிடலாம். விதையை நீக்கிவிட்டு அதற்குள் ஐசிங்கிறீம் வைத்துச் சாப்பிடலாம். அல்லது கஜு வைத்துச் சாப்பிட ருசியோ ருசி.



## மாதுளம்பழம்

மாதுளம்பழத்தை யூஸ் செய்து சாப்பிடலாம். விதையோடு அரைத்தால் யூஸ் கசந்துவிடும். மாதுளையை உரித்தெடுத்து வடிகட்டியில் போட்டுக் கொள்ளுங்கள்.

இப்போது ஒரு கரண்டியால் உள்ளிருக்கும் விதையை நசுக்கிவிடாமல் கசக்கி எடுங்கள். இப்படித்தான் யூஸ் செய்யவேண்டும்.

மாதுளையின் தலைப் பகுதியை வெட்டிவிடுங்கள். பிறகு, மஞ்சள் கோடாகத் தெரியும் பகுதியில் கீறல் போட்டு வெட்டிஎடுக்கவேண்டும்.

வெளித்தோல் பழபழப்பாக இருக்கும் மாதுளையை வாங்க வேண்டும். நல்லபழமாக இருந்தால், பழத்திற்கேற்ற பாரமாக இருக்கும்.



## வாழைப்பழம்

வாழைப்பழத்தைப் பொறுத்தவரையில், வழுவழுப்புத்தன்மையால், சில குழந்தைகளுக்கு இதைப் பிடிக்காது.

பழத்தை மில்க்ஷேக் செய்து கொடுத்தால், மடமடவென்று குடிததுவிடுவார்கள்.

வாழைப்பழத்தின் பழச் சாற்றை ஐஸ்கிறீமுடன் சேர்த்துச் சாப்பிட்டால் அதன் சுவைகூடும்.



# சவால்களுக்கு முகம் கொடுப்பது

பிரச்சினை ஒன்றையே நாம் சவால் என்கின்றோம். அந்தப் பிரச்சினைக்கு நாம் தீர்வு ஒன்றைக் காணவேண்டும். பிரச்சினைகள் அதிகரித்துவிட்டால் அவற்றுக்குத் தீர்வு காண்பது கஷ்டமாகிவிடும். பிரச்சினைக்கு மேல் பிரச்சினை என்று பலர் அங்கலாய்ப்பதற்குக் காரணம் - அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் பலம் அவர்களிடம் இல்லாததே. இந்தப் பிரச்சினையையே- மனோதத்துவம் 'சவால்' என்று கூறுகிறது. சவால்களை நாம் வெல்ல வேண்டும். சவாலை வென்றவுடன், உள்ளம் அமைதி அடைகிறது.



நீங்கள் புதிய மனநிலையொன்றை அடைவதற்கு, இயற்கையானது மிகவும் பிரயத்தனப்படுகிறது.

சவால்களை வெல்ல உங்களை ஊக்குவிப்பதே அது. மனஓர்மையில் ஏற்றுக்கொள்ளும் பலமும் ஒருங்கே அமைந்திருப்பதைப் பலர் அறிந்துள்ளனர்.

நாமனைவரும் பலவிதமான சவால்களுக்கு முகங்கொடுக்கவேண்டியுள்ளது. அவை தேவைகளைப் பொறுத்தே அமைகின்றது.

உதாரணமாக - நீங்கள் ஒரு புதிய சிறு தொழிலாளி என்று எண்ணுங்கள். தொழில் உலகில் வாழும் முறையானது, பொது வாழ்க்கை நிலைக்கு மாற்றமானது. வர்த்தக உலகில் நீங்கள் ஒரு புதியவர். முறையற்ற திட்டம் ஒன்று உங்கள் உள்ளத்துள் இருக்கலாம். உங்களது பொருளாதார நிலையும் சீரற்றதாக இருக்கலாம்.

## எப்படி?

ஆனால், உங்கள் ஆழ்மனம் உங்களை ஒரு சிறந்த தொழிலாளியாக இனங்காட்டிக்கொண்டிருக்கலாம்.

அந்த எண்ணம் ஏற்பட்ட கணத்திலிருந்து, நீங்கள் அறியாமலே உங்கள் உள்ளத்துள் பல கற்பனைகள் உருவாகும். தேவையான பணத்தையே திரட்டிக்கொள்வது, போதிய அறிவுரை பெறுவது, புதிய தொழிலை அமைத்துக்கொள்வது போன்ற கற்பனைகளுக்கு அளவே கிடையாது. இவை அனைத்தும், சிறுகதை ஒன்றை எழுதுவதைப் போன்று உங்கள் உள்ளத்துள் உதயமாகும். இந்தகைய எண்ணங்கள்தான் உங்களை நீங்கள் அறியாமல் சவால்களை வென்றெடுப்பதற்கு உறுதுணையாகின்றன.

நீங்கள் இதுவரை கற்பனையில் கண்டுகொண்டிருந்த புதிய தொழிலானது - அதாவது புதிய உலகமானது. தற்போது உண்மையாகவே உங்கள்முன் காட்சியளிக்கிறது. முயற்சி பலனளிக்கக்கூடிய தருணம் இதுவே, சவால் ஒன்றைவெல்வதற்கான முக்கிய எரிபொருள் பாதுகாப்பற்ற தன்மையாகும். எந்நேரமும் இதற்கு முகம் கொடுக்கக்கூடிய வல்லமை உங்களிடம் இருக்கவேண்டும்.

இந்தப் பாதுகாப்பற்ற தன்மை எனும் எரிபொருள், மிகவும் கவனமாகவே பயன்படுத்தப்படவேண்டும்.

அந்த எரிபொருளின் தேவையற்ற பாகம் கவனயீனமாகும். அப்படியாயின் அதன் அத்தியாவசியமான பாகம் கவனமாகும். சவாலை வெல்ல முயற்சிக்கின்ற அளவுக்குப் பிரதிபலன் இல்லையே என்று சிலவேளைகளில் உங்களுக்குத் தோன்றலாம். உங்களுக்குப் பொருத்தமான அளவிலன்றி, நீங்கள் எதிர்பார்த்த அளவில் பிரதிபலன் கிடைக்காததுதான்.

இந்த இடத்தில்தான் கிடைத்ததைக்கொண்டு திருப்தி அடைதல் என்னும் உபதேசம் உங்களுக்குக் கைகொடுக்கும்.

கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடையும் அளவுக்கு நீங்கள் பண்புள்ளவர் எனின், உங்களுக்குத் தாங்கிக் கொள்ளும் பலம் உண்டு என்பதை மனதில் கொள்ளுங்கள். சவால்களை வெல்ல முற்படும்போது, அது தொடர்பான செயற்பாடுகளுக்கு ஓய்வே இல்லை. எமது எண்ணங்களை ஒரு இடத்தில் சேமித்து வைப்பதற்கு இடமேயிருக்காது. எண்ணங்களைச் சேமித்து வைத்துவிட்டு, ஆழ்மனம் உறங்கிவிட்டால், புதிய எண்ணம் என்றும் உதிக்காது.

# எண்ணெய்ச் சருமத்தை பராமரிக்கும் முறை

பொதுவாக எண்ணெய்ச் சருமத்திலே சிறிய துவாரங்கள் காணப்படுவதனால், மேற்பரப்பானது எந்தநேரமும் என்ணெய்த் தன்மையுடன் காணப்படும். தோலினுள் காணப்படும் எண்ணெய்ச் சுரப்பிகளின் மேலதிக தொழிற்பாடே இதற்குக் காரணமாக அமைகிறது.

இந்தவகைச் சருமமானது, மிகவும் மென்மையாகக் கையாளப்படவேண்டியது ஆகும். அதிகப்படியான அழுத்தம் எண்ணெய்ச் சுரப்பை அதிகரிக்கச் செய்வதாகவும், ஈரலிப்புத் தன்மையை குறைப்பதற்குக் காரணமாகவும் அமையும்.

மிக ஐதான அழகுசாதனப் பொருட்களைப் பயன்படுத்தவேண்டும். இவை மேற்பரப்பிலுள்ள மேலதிக எண்ணெய்த் தன்மயை அகற்றுவதாயும், துவாரங்களிலுள்ள அடைப்புக்களை நீக்குவதாயும், தோலுக்கு ஈரலிப்பை வழங்கி, அதனை உலரச்செய்யாமலும் அதனைக் காயப்படுத்தாமலும் இருக்கச்செய்யும்.

எண்ணெய்ச் சருமம் உடையோருக்கு, பருக்களேற்படும் அபாயம் அதிகமாக இருப்பதால், சருமத்தைச் சரியானமுறையில் சுத்தம் செய்யவேண்டும். பருக்களைக் கிள்ளும் செயலானது சிலசமயங்களில் நிரந்தரமான வடுக்களை ஏற்படுத்தக் கூடியதாக அமையாலாம்.

**முகப்பருக்கள் அதிகரிக்க ஏதுவான சில காரணங்களாவன:**

- **ஓமோன்களில் ஏற்படும் மாற்றங்கள்.**
- **மன அழுத்தம்**
- **சருமத்தைச் சரியானமுறையில் சுத்தம் செய்யாமை.**
- **பருக்களைக் கிள்ளுதல்**

**எண்ணெய்ச் சருமத்தை கையாளும் முறை -**

✦ மேற்பரப்பிலுள்ள அதிகப்படியான எண்ணெய்த்தன்மையை அகற்றவல்ல சவர்க்காரமற்ற முக அழுக்கு நீக்கிகளை உபயோகிக்க வேண்டும்.



(சவர்க்காரமானது தோலன் ஈரலிப்பை அகற்றி உலர்சருமத்தைத் தோற்றுவிக்கும்).

இதனை ஈரலிப்பான சருமத்தில் பூசிப் பரவ வேண்டும். அழுக்குகள், எண்ணெய் தன்மை, ஒப்பனை மீதிகள் என்பன அதில் கரைந்ததும், சுடுநீரில் தோய்த்த பஞ்சினால் அதனை அகற்றவேண்டும்.

✦ உங்கள் சருமத்திற்கு உகந்த புத்துணர்வூட்டும் (**Astringent lotion**) தசைகளை வலுப்படுத்தும்.

பஞ்சில் நனைத்து எண்ணெய்த் தன்மையுடைய பகுதிகளில் ஒற்ற வேண்டும். கண்களைச் சுற்றியுள்ள பகுதி மிகவும் மென்மையானதாகையால், அந்தப் பகுதியைத் தவிர்த்துக்கொள்வது நல்லது.



✦ ஈரலிப்பாகிய முகம் முழுவதும் பூசி விடவேண்டும்.



சருமத்தினால் இது உறிஞ்சப்பட்டவுடன், மேலதிகமாக இருப்பதைத் துப்பரவான துணியினால் அகற்றிக்கொள்ள வேண்டும்.

✦ எண்ணெய்ச் சருமமானது அடிக்கடி வெள்ளை, கறுப்பு வடுக்கள், பருக்கள் என்பவற்றால் தாக்கப்படுவதால் தொடர்ந்து கவனிப்பு அவசியமாகின்றது. எனவே, உங்கள் சருமத்தை, உலராமலும், நேர்த்தியாகவும் பராமரிக்கத் தெரிந்துகொள்ளுங்கள்.



நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*வீறுஎய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்*
*ஊறுஎய்தி உள்ளப் படும்.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### தமிழுணர்வாளர்களின் விடுதலை

இந்தியாவின் ஜனநாயகவிரோத - மனித உரிமைகளுக்கு முரணான சட்டங்களில் ஒன்றான 'பொடா' என்றழைக்கப்படும் பயங்கரவாத தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சுமார் ஒன்றரை வருடங்கள் வரை ஒழுங்கான விசாரணைகளோ, பிணை மூலமான விடுதலையோ இன்றிச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழர் தேசிய இயக்கத்தலைவரான பழ.நெடுமாறன், சுப.வீரபாண்டியன் ஆகியோர் உட்பட நால்வர் சென்னை உயர் நீதிமன்றத்தால் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நால்வரும் இனமானம் மிக்க தமிழுணர்வாளர்கள் மட்டுமல்ல, கண்ணியமும் நேர்மையும் மிக்க தமிழறிஞர்களும் ஆவர்.

உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் உரிமைக்கான, விடுதலைக்கான போராட்டங்களுக்கு தார்மீக ரீதியிலான தமது ஆதரவுக்குரலை சுயநல அரசியல்வாதிகளைப் போலல்லாது, பொதுமை நோக்குடன் கூடிய அரசியல் எழுச்சி உணர்வுடன் தமிழகத்தில் இருந்தவாறே இன உணர்வுடன் ஒலித்துக்கொண்டிருப்பவர்கள் இவர்கள்.

தமிழரல்லாத, தமிழுணர்வும் இல்லாத தமிழகத்தின் ஆட்சித்தலைமையானது - தமிழுக்காகவும், தமிழர்களுக்காகவும் குரல் கொடுப்பவர்களை பயங்கரவாதிகளாகவும், பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுபவர்களாகவும் அல்லது பயங்கரவாதிகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பவர்களாகவும் அடையாளமிட்டு அவர்களை ஜனநாயகத்துக்கும், அடிப்படை மனித உரிமைகளுக்கும் எதிராக ஈவிரக்கமற்ற அநீதியானதொரு சட்டமான பொடா என்ற சட்டத்தின்கீழ் கைது செய்து சிறையில் அடைத்து வேடிக்கை பார்க்கும் ஒரு விதமான உளவியல் குறைபாட்டுக்கு உள்ளாகியுள்ளதை அண்மைக்காலச் சம்பவங்கள் பலவும் உணர வைத்துள்ளன.

உலகில் மிகவும் பாரிய ஜனநாயக நாடென்று தன்னைப் பெருமெடுப்பில் பீற்றிக்கொள்ளும் இந்தியாவில் - ஜன நாயக உரிமைகள், அடிப்படை மனித உரிமைகள் எந்த ளவில் ஆட்சியாளர்களால் கௌரவிக்கப்படுகின்றது என் பதை தமிழகத்திலிருந்து வெளியாகும் பத்திரிகைகள், சஞ்சிகைகளை ஒரு நோட்டம் விட்டால் அறிந்துகொள்ள முடியும்.

மூன்றாம்தர தமிழ் சினிமா ரசிகர்களின் கனவுலக நாயகர்களும், நாயகிகளும் தமது சினிமா உலக அந்தஸ்தை, அரசியல் அந்தஸ்தாக உயர்த்திக் கொள்ளும் ரஸவாதம் தெரிந்தவர்களாக இருப்பதும், தமிழ் மக்களில் பெருமளவிலான பாமரர்களின் மனதில் அவர்கள் தம்மை இதய தெய்வங்களாக வடிவம் காட்டும் மாயத் தோற்றத்தை உருவாக்கும் தந்திரத்தை தெரிந்து கொண்டிருப்பதும், தமிழகத்தில் தமிழனுக்கான அரசியலை சினிமாத் தனமாக்கி விட்டது.

ஆரம்பத்தில் எம்.ஜி.ஆர் கலைஞனாக இருந்தாலும் அவருக்கான அரசியல் அடித்தளம் ஒன்று திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இறுக்கமாகப் பிணைந்திருந்தமையால் அவருக்கான அரசியல் உயர்அந்தஸ்தானது மாபெரும் அவரது ரசிகர் கூட்டத்தால் உறுதிப்படுத்தப்பட்டது என்னமோ உண்மைதான்.

ஆனால், அவரது தேர்வில் உள்வாங்கப்பட்ட அவரின் அரசியல் வாரிசுகள் தாம் அவரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்ற உணர்வை மட்டும் அவரது ரசிகர்களிடம் ஆழப் பதியவைத்துவிட்டு அவர்களின் ஆதரவுடன் ஆட்சிபீடம் ஏறிய அசம்பாவிதம் ஏற்பட்ட பின்னரே தமிழன் தமிழனாகக் கம்பீரம் காட்டும் தன்மையை இழந்து தகுதியற்றவரின் காலில் விழும் கலாசாரத்தை தழுவும் ஆபத்து உருவானது.

இந்த ஆபத்து, அசிங்கத்தை உணர்த்த முயன்ற இனமான - தமிழுணர்வாளர்கள் ஆட்சிப்பீடத்தலைமையால் பயங்கரவாதிகளாக அல்லது அவர்களின் ஆதரவாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டார்கள்.

ஒரு நாட்டினால் தடை செய்யப்பட்ட அமைப்பை அதன் செயற்பாட்டு நியாயங்காரணமாக அதன் இலட்சிய ஓர்மத்தின் அவசியம் காரணமாக, ஒரு குடிமகன் உண்மையான பொதுமை உணர்வுடன், மனித உணர்வுடன் ஆதரிப்பதைத் தடுப்பது அவனது தார்மீக உரிமைகளை மறுப்பதே ஆகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தின் நியாயத் தன்மையை, தமிழ்மக்களை அரச பயங்கரவாதத்தின் இராணுவ ரீதியிலான அணுகுமுறை - ஒடுக்குமுறை நடவடிக்கைகள் அழித்தொழிக்கும் அநியாயத்தை தன்னின மக்களுக்கு எடுத்துரைக்கும் உரிமையை நிராகரிக்கும் எந்தவொரு சட்டமும் ஜனநாயக தர்மத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாக இருக்க முடியாது.

பொடா சட்டம் அத்தகைய ஜனநாயக விரோத நோக்கில் உருவாக்கப்பட்ட சட்டம் என்பதில் ஐயமில்லை.


இச்சட்டம் இந்தியாவில் அமுல் செய்யப்படும் முறை சர்ச்சைக்குள்ளாகியுள்ள நிலையில், நெடுமாறன் - சுப.வீரபாண்டியன் - பாவாணன் - தாயப்பன் என்கிற இந்த நான்கு தமிழுணர்வாளர்களும் பிணையில் விடுதலையாகி இருப்பது ஜெயலலிதாவின் அதிகார அகங்காரத்திற்குக் கிடைத்த தோல்வியேயாகும்.

தமிழுக்காகவும், தமிழினத்திற்காகவும் சிறை சென்ற இவர்களுக்காக உண்மையான உணர்வுள்ள தமிழினம் முழுவதும் தலைவணங்குகிறது.

வரலாறு உங்களை விடுதலை செய்துள்ளது.

காலம் உண்மையான குற்றவாளிகளை காலம் கடந்தேனும் தண்டித்தே தீரும்.

## நாடும் நடப்பும்




### தமிழ், முஸ்லிம் மக்கள் ஓரணியில் போட்டியிட்டு

# தேர்தலில் வெற்றிபெறுவதன்மூலம் தமது ஒற்றுமையை நிரூபிக்கவேண்டும்

### அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் - முஸ்லிம் மக்கள் எதிர்வரும் தேர்தல் காலங்களில் ஓரணியாகப் போட்டியிட்டு வெற்றிபெறுவதன்மூலம், தமது சமூகபலத்தை நிரூபிக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரன்.

தமிழ் - முஸ்லிம் மக்களிடையே காணப்பட்ட கருத்து வேறுபாடுகளை மறந்து செயற்படவேண்டிய காலம் இது என்றும் - இந்த விடயம் தொடர்பாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, மலையக அரசியல் சங்கங்கள், முஸ்லிம் கட்சிகள் என்பவற்றுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் சிறுபான்மையாக வாழும் இடங்களில் முஸ்லிம் வேட்பாளர்களை ஆதரித்தும், முஸ்லிம்கள் சிறுபானமையாக வாழும் இடங்களில், தமிழ் வேட்பாளர்களை ஆதரித்தும் - வாக்காளர்கள் சிறுபான்மைக் கட்சிகளின சமூக பலத்தை நிரூபிக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு - கிழக்கு தமிழர்களும், முஸ்லிம்களும் - தேசிய கட்சிகளுடன் உறவுகளைப் பேணுவதில் எவ்விதமான செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பாக ஒன்றிணைந்து முடிவுகளை மேற்கொள்ளவேண்டும்.

சிறுபான்மை மக்கள் தொடர்ந்தும் இணைந்து செயற்பட வேண்டும் என்பதற்கான ஆரம்பமாக இதனைச் செய்யவேண்டும்

வடக்கு - கிழக்கில் குடியேறியுள்ள இந்திய வம்சாவளியினர், இப்பகுதியில் போட்டியிடுகின்ற தமிழ் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டும். மலையகத்தில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களுக்கு, இங்குவாழும் முஸ்லிம் மக்களும் தமது ஆதரவை இணைந்து வழங்கவேண்டும். இவ்வாறான நிலைப்பாடுகளை, மலையக மக்கள் முன்னணி ஏற்படுத்தியிருப்பதாகச் சந்திரசேகரன் மேலும் தெரிவித்தார். (01)

## ஆதிவாசிகளின் அபிவிருத்திக்கு தனியான அமைச்சுத் தேவை!

### வேடுவத் தலைவர் கோரிக்கை

(கொழும்பு)

ஆதிவாசிகளின் சமூக அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு, தனியான ஒரு அமைச்சு ஏற்படுத்தப்பட வேண்டும். இதன் மூலமே ஆதிவாசிகளுக்கான சமூக அபிவிருத்திகளை மேற்கொள்ளமுடியும். இவ்வாறு, பதுளை மாவட்டத்தில் தம்பனையில் வசிக்கும் வேடுவத் தலைவரான ஊருவரிகே வன்னிய தெரிவித்தார்.

அரசுக்கு இது தொடர்பாக அறிவித்திருப்பதாகவும் - தமது சமூகத்திற்கு தனியானதும், அதேவேளை பாரம்பரியமானதுமான நடைமுறைகள் உள்ளன. இவற்றிற்கு தற்போது அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. மேலும் சமூகத்திற்கான தேவைகளும் அபிலாஷைகளும் பெருமளவில் உள்ளன. ஆகவேதான் தனியான ஒரு அமைச்சை தனது சமூகத்திற்கு கோரியிருப்பதாக வேடுவத் தலைவர் கூறியுள்ளார். (01)

## சட்டத்தரணி தாக்கப்பட்ட சம்பவம்; ஜே.வி.பியினர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்!

ஜே.வி.பியைச் சேர்ந்த சட்டத்தரணியான சுனில் வத்தகல- ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த மாநகரசபை உறுப்பினர்களின் குழுவொன்றினால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து, கொழும்பு மாநகரசபைக்கு முன்னால் நேற்றுமுன்தினம் ஜே.வி.பினரால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் கொழும்பு மாநகர சபை உறுபபினரான சுனில் வத்தகலவை, சபைக்கட்டடத்தில்வைத்து, ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் தாக்கியுள்ளதாக ஜே.வி.பி குற்றம்சாட்டியுள்ளது.

# பிரதேச செயலாளரைத் தாக்கிய நாடாளுமன்ற உறுப்பினர் சரண்

(கொழும்பு)

புளத் சிங்கள பிரதேச செயலாளர் மீது தாககுதல் நடத்திய தாகக குற்றம் சாட்டப்பட்டுள்ள களுத்துறை மாவட்ட ஐக்கிய தேசிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினரும், புளத் சிங்களத் தொகுதி ஐ.தே.மு அமைப்பாளருமான லக்ஷ்மன் விஜேமான - மத்துகம நீதிமன்றில் நேற்றுமுன்தினம் சரணடைந்தார்.

இவருடன் அந்தத் தாக்குதலில் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் மேல்மாகாணசபை உறுப்பினர் சேனக சமரநாயக்க உட்பட ஐந்து சந்தேக நபர்களும் சரணடைந்தனர்.

சந்தேகநபர்களைப் பிணையில்செல்ல அனுமதி வழங்கிய மத்துகம நீதிவான் - அடுத்த வருடம் மே மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றில் ஆஜராக உத்தரவிட்டார்.

ஐ.தே.மு. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் விஜேமான உட்பட ஐநது சந்தேக நபர்களையும், பிரதேச செயலாளரைத் தாக்கிய குற்றத்துக்காக கைதுசெய்யும் நோக்குடன், பல விசேட பொலிஸ் குழுக்கள் தேடுதல் வேட்டைகளை நடத்தியபோதும், இவர்களைக் கைதுசெய்ய முடியவில்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை புளத் சிங்களவில் இடம்பெற்ற களியாட்ட நிகழ்வொன்றில் வைத்து பிரதேச செயலர் சிறிவர்த்தன தாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அடுத்த ஆண்டுமுதல் வரலாறும் கட்டாய பாடமாக்கப்படவுள்ளது!

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

அடுத்த ஆண்டுமுதல் - ஏழாம் தரம் முதல் வரலாற்றுப் பாடமும் கட்டாயமாக்கப்படுமென, கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வரலாறு 7 ஆம் தரம் முதல் 11 ஆம் தரம் வரையும் கட்டாயமாகக் கற்பிக்கப்படல்வேண்டும். இதற்கென வாரம் ஒன்றிற்கு ஒவ்வொரு வகுப்புகளுக்கும் 3 மணித்தியாலங்கள் சராசரியாக வழங்கப்படல் வேண்டும்.

பாடசாலைகளில் தனிப்பாடமாக இருந்துவந்த வரலாற்றுப் பாடம், 1992 ஆம் ஆண்டுமுதல் புதிய கல்விக்கொள்கையின் பிரகாரம், வரலாறும் சமூகக்கல்வியும் என்ற ஓர் பாடம் அறிமுகப் படுத்தப்பட்டிருந்தது. எனினும் மாணவர் மத்தியில் வரலாற்றுத் தேவைகளையும், உண்மைகளையும் வெளிப்படுத்தவே, இந்தக் கட்டாயபாடமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதற்காக வரலாறு கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களுக்கான நியமனங்களும் விரைவில் வழங்கப்படவுள்ளன.

வரலாற்றுப் பாடத்தினை மேமபடுத்தும் நோக்கில், மத்திய கலாசார நிதியத்தின்மூலம், வரலாற்றுடன் தொடர்புடைய சிறுவர்களுக்கான கதைப்புத்தகங்களை அச்சிட்டு வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி மாகாண மட்டங்களில் நூதனசாலைகளும் அமைக்கப்படவுள்ளன எனவும் அவர் தெரிவித்தார். (01)

# இந்த வார பலன்கள்

## 19.12.2003 - 25.12.2003 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| செவ் | ராகு | | சனி |
| யுரே | 20 பி.இ. 4.29 விரு -சந்<br>22 பி.இ. 4.16 தனு-சந்<br>24 பி.இ. 4.15 மக-சந் | | |
| நெப் சுக் | | | குரு |
| சூ. புத | | சந் கேது | |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*

மேடராசிக்காரர்களுக்கு தொழில் ஓரளவு நன்று. குடும்ப வாழ்க்கை கஷ்டமின்றி இயல்பாக நடக்கும். பொருளாதாரம் வரவுக்கு ஏற்ப செலவுகளும் அமையும். தேகசுகம் இடையிடையே பாதிக்கப்படக்கூடும். எனினும், பெரிய செலவுகள் ஏற்படாது. திருமணம் சம்பந்தமான பேச்சுக்கள் தீர்மானமின்றி, இழுபறி நிலையையே காட்டும். உத்தியோகத்தர்கள் தமது பணிகளை ஓரளவு சிறப்பாகச் செய்து நன்மதிப்பைப் பெறுவர். வர்த்தகத்துறையிலுள்ளோர் தமது முயற்சிகளுக்கேற்ப இலாபம் காண்பர். புது முதலீடுகள் நன்மை தரக்கூடியதாக அமையும். விவசாயத்துறையினர் ஏனையோரிலும் பார்க்க கூடிய இலாபம்பெற இடமுண்டு. மாணவர்கள் பொழுதுபோக்குத் துறைகளைக் குறைத்து, கல்வியில் கூடுதலாக ஈடுபடவேண்டும்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*

இடபராசியினருக்கு ஏழரைச்சனி பிற்பகுதியில் நடப்பதால், குடும்பத்தில் நிம்மதிக்குறைவு ஏற்படலாம். தொழல் முயற்சிகள் சிறப்பாக இராது. வரவிலும் பார்க்கச் செலவு கூடுதலாகவே காட்டும். தொடங்குகின்ற எல்லாக்கருமங்களிலும் தாமதத்தையே காட்டும். அயலவர்களுடன் மன வேற்றுமை ஏற்படலாம். தேகாரோக்கியம், உற்சாகம் என்பன குறைவாகவே இருக்கும். திருமணப் பேச்சுக்கள் காலந்தள்ளிப்போகும். பிரயாணத்தை எதிர்நோக்குவோருக்கு கருமம் கைகூடாது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு கூடுதலாக இருக்கும். எளிதில் மனவிரக்தியடைவர். வியாபாகளுக்கு தொழில் மந்தநிலையையே காட்டுகிறது. புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். மாணவர்கள் கல்வியில் போதிய ஊக்கம்வேண்டும்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*

மிதுனராசியினருக்கு செய்தொழிலில் அதிக இலாபம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், மனநிறைவும் காணப்படும. உறவினர், நண்பர்களால் உதவி கடைக்கும். பெண்கள் மனப்பூரிப்புடன் காணப்படுவர். புதிதாக ஆடம்பரப் பொருட்களை வாங்குவதல் ஈடுபடுவர். வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்கும். இனபந்துக்களின் வருகையால், வீட்டில் மகிழ்ச்சியும், குதூகலமும் தோன்றும். உத்தியோகத்தர் மனநிறைவுடன் பணியாற்றி, அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவர்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். பழைய முதலீடுகள் நல்ல விலைபோகும். மாணவர்கள் கல்வியில் கூடுதல் ஊக்கம் காட்டுவர். பரீட்சைகளில் கூடிய புள்ளிகள் பெறுவர்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*

கடகராசியில் பிறந்தவர்களுக்குப் பொருளாதாரநிலை உயர்வடையும். குடும்பத்தில் நற்கருமங்கள் நடைபெறும். வெளிநாட்டிலிருந்து பொருளுதவி வந்துசேரும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். குடும்பப் பெண்கள் மகிழச்சியுடன் காணப்படுவார்கள். இல்லறத்தில் இணைய விரும்புவோருக்கு காலம்கனியும். உடல்நிலை பொதுவாக நன்று. புதிதாகத் தொழிலில் ஈடுபட விரும்புவோருக்கு விரைவில் பலன்கிடைக்கும். விவசாயத்துறையினர் மேலதிக இலாபம் பெறுவர். வர்த்தகர்கள் தமது விடாமுயற்சியால் கூடுதலான இலாபத்தை அடைவர். உத்தியோகத்தர்கள் மகிழச்சியுடன் பணிபுரிவர். மாணவர்களுக்கு முன்னேற்றமும், பாராட்டுக்களும் உண்டு..

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*

சிங்கராசிக்காரருக்குத் தொழில் வருவாய் நன்றாக இருப்பினும், நிம்மதி கடையாது. குடும்பத்தில் இடையிடையே தேவையற்ற சச்சரவுகள் தோன்றும். உறவினர்களால் தொல்லைகள் தலைதூக்கும். கொடுக்கல், வாங்கல்களில் கூடிய அவதானம்தேவை. தேவையற்ற பொது விடயங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும். தேகசௌக்கியமும் இடையிடையே பாதிக்கக்கூடும். சுபகாரிய நிகழ்வுகள், திருமணப் பேச்சுக்கள் என்பன காலதாமதத்தைக் காட்டும். உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு வேலைப்பழு அதிகமாகும். அத்துடன், உயரதிகாரிகளின் தொல்லைகளுக்கும் ஆளாகலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தமாகவே இருக்கும்.

முதலீடுகளை விற்றுப் பணமாக்கமுடியாது திண்டாட நேரிடும். மாணவர்கள் கல்வியை முன்னெடுப்பதில் பல இடையூறுகள் ஏற்படும். கவனம் விளையாட்டில் செல்லும்.

### கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*

கன்னிராசியினருக்குத் தொழில் ஓரளவு ஓடிக்கொண்டிருப்பினும், பற்றாக்குறை தொடரும். குடும்பத்தில் சிறுசிறு பிணக்குகள் தோன்றிமறையும். சிக்கனத்தைக் கடைப்பிடித்தால், பொருள் கஷ்டதைச் சமாளிக்கலாம். குடும்பப் பெண்களும் சமய சந்தர்ப்பத்தை நோக்கி நடக்கவேண்டும். உடல் ஆரோக்கியம் சிறிது பாதிக்கப்படலாம். திருமணம் சம்பந்தமான விடயங்கள் காலதாமதத்தின்மேல் நடக்கும்.

வெளிநாட்டுப் பிரயாணங்கள் கஷடபலனையே கொடுக்கும். உத்தியோகத்தர்கள் பொறுமையுடன் தமது பணிகளை மேற்கொள்ளவேண்டும். வர்த்தகர்கள் வியாபாரத்தில் விழிப்பாக இருக்கவேணடும். ஏமாற்றப்பட இடமுண்டு. மாணவர்கள் ஊக்கத்துடன் முன்னேறவேண்டும். சித்திகள் உண்டு.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*

துலாராசியினருக்குக் குடும்பத்தில் சில வாக்குவாதங்கள் ஏற்படலாம். பொருள் வரவு திருப்தியாக அமையாது. வரவிலும் பார்க்கச்செலவு கூடுதலாகவே இருக்கும். தொடங்கிய கருமங்கள் எதுவும் உரியநேரத்தில் நிறைவேறாது. திருமணப் பேச்சுக்களும் காலதாமதத்தை ஏற்படுத்தும். தேகாரோக்கியம் குன்றுவதால், வைத்தியச் செலவு கூடுதலாக இருக்கும். தேவையில்லாத வீண்சிரமங்கள் ஏற்படலாம். உத்தியோகத்தர்களுக்கு சில எதிர்ப்புக்கள் மறைமுகமாகச் செயற்படும். வியாபாரிகளுக்குத் தொழில் ஆமைவேகத்திலேயே நடக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. மாணவர்கள் சோம்பல்தனமுடையவராகக் காணப்படுவர். அவதானத்துடன் முன்னேறவும்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*

விருச்சிக ராசிக்காரர் தொழில்மூலம் நல்ல வருவாய் பெறுவர். மேலும் அந்நிய நாட்டிலிருந்து பொருள்வரவுகிட்டும். தளப்படியில்லாமல் வாழ்க்கை நடக்கும். குடும்பத்தில் ஓரளவு மகிழ்ச்சி நிலவும். வீட்டில் சுபநிகழ்வுகள் ஏற்படலாம். வெளிநாட்டிலிருந்து உறவினரின் வருகையால் வீட்டில் குதூகலம் காணப்படும். தேகசுகம், குடும்ப சுகம் நன்றாக அமையும். திருமணத்தை எதிர்நோக்குவோருக்குக் கருமம் அனுகூலமாகும். அடிக்கடி பிராயாணங்கள் மேற்கொள்ளவேண்டிவரும். உத்தியோகத்தவர்களுக்கு வசதியான இடமாற்றங்கள், உயர்வுகள் கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். புது முதலீடுகளும் நன்று. மாணவர்களுக்கு முன்னேற்றங்களும், ஆசிரியரின் பாராட்டுக்களும் உண்டு.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*

இவர்களுக்கு இவ்வாரம் நன்மை குறைந்த பலன்களே நடக்கும். குடும்பத்தில் அந்நியோன்ய உறவுகள் பாதிக்கப்படலாம். மனநிம்மதிக் குறைவு காணும். பிள்ளைகளால் செலவுகள் எற்படும். குடும்பப் பெண்கள் மன உற்சாகம் குறைந்து காணப்படுவர். கடன் தொல்லைகளும் தலைதூக்கும். தேகாரோக்கியக் குறைவால் வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். திருமணத்தை எதிர்நோக்குவோருக்கு கல்யாணப் பேச்சுக்கள் தாமதத்தைத் தரும். தூரதேசப் பிரயாணத்தை மேற்கொள்வோருக்கும் இழுபறிநிலை ஏற்படும். உத்தியோகத்துறையினர் அதிக வேலைப்பழுவைச் சுமக்கநேரிடும்.

வியாபாரிகளுக்கு வியாபாரம் மந்தநிலையையே காட்டும். கடன் வியாபாரங்களைத் தவிர்தல் நன்று. மாணவர்கள் கல்வியில் ஊக்கம் குறைந்து காணப்படுவர். விளையாட்டில் ஈடுபாடு அதிகரிக்கும்.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*

மகரராசியினருக்குச் செய்தொழில் முயற்சிக்கேற்ப வருவாய் உண்டு. எனினும், குடும்பத்தில் மனவேற்றுமைகளும், வாக்குவாதங்களும் காணப்படும் பொதுவாக நிம்மதி குறைவாகவே இருக்கும். குடும்பப் பெண்களும் மனச்சோர்வுடையவராக இருப்பார்.

திருமணத்தை எதிர்நோக்குவோருக்கு பேச்சுக்களில் இடையூறுகள் தென்படலாம். கடன் தொல்லைகளையும் சமாளிக்கவேண்டியிருக்கும். வீண்வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். அயலவர்களாலும், நண்பர்களாலும் துன்பங்கள் ஏற்படக்கூடும். உத்தியோகத்தர்கள் தமது கருமத்தில் அவதானமாக இருக்கவும்.

மறைமுக எதிரிகளால் கஷ்டம் வரலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலை காட்டும். எனினும், முயற்சியினால் ஓரளவு நற்பலன் கிடைக்கும். மாணவர்கள் விளையாட்டைக் குறைத்து கல்வியில் ஈடுபடவேண்டும்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள )*

இவர்களுக்கு பலவகையாலும் நன்மையைத் தரக்கூடிய வாரமாகும். தொழில் நன்றாக நடக்கும். பொருளாதாரம் மேன்மையடையும் மனமகிழ்ச்சியும், நிம்மதியும் காணப்படும். நண்பர்கள், உறவினர்கள் உதவி தருவார்கள். தொடங்கும் கருமங்கள் தங்குதடையின்றி ஒப்பேறும். திருமணம் சம்பந்தமான கருமங்கள் சற்றுத்தாமதித்தாலும் நற்பலனைத் தரும்.

தேகநிலை புதுத்தெம்புடன் உற்சாகமாக இருக்கும். உத்தியோகத்தர் உற்சாகத்துடன் தமது பணியை மேற்கொண்டு பாராட்டைப் பெறுவார்கள். வியாபாரிகளுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும், பணமும் சேரும். மாணவர்கள் கல்வியில் அதிக நாட்டங்கொள்வர். சித்தியும், பாராட்டும் பெறுவர்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*

மீனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நல்லுறவு காணப்படும் தொழில் முயற்சிகள் முன்னேற்றத்தைத் தரும்.


பிள்ளைகளால் நற்பலன்கள் கிட்டும். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடக்கும். குடும்பப் பெண்கள் திருப்தியுடன் உற்சாகமாகக் காணப்படுவர். செலவுகள் கூடுதலாகக் காணப்பட்டாலும், அதைச் சமாளிக்கத்தக்க வருவாய் உண்டு.

அடிக்கடி பிரயாணங்களில் ஈடபடவேண்டிவரும். இல்லறவாழ்வை விரும்பும் பெண்களுக்கு ஏற்ற வரன் அமையலாம். உத்தியோகத்துறையில் சிலருக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்க இடமுண்டு.

வேலைப்பழு கூடுதலாக இருப்பினும், அதனைச் சமாளித்துக்கொள்வர். வார்த்தகத்துறையினருக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். எதிர்பார்த்த இலாபம் பெறலாம். சிலருக்கு வியாபாரம் சம்பந்தமான கடனுதவி கிடைக்கலாம். மாணவர்கள் பலதுறைகளிலும் முன்னேற்றம் காண்பர். சித்திகளும் உண்டு.

---

# தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களை —— உலக அரங்கிற்கு கொண்டுசெல்வதே எமது நோக்கு



**மனித உரிமைகள் தினமாகிய கடந்த 10 ஆம் திகதி - பிரான்ஸைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் தமிழர் மனித உரிமைகள் நிலையத்தின் பொதுச் செயலாளர் எஸ்.வி.கிருபாகரன் - நமது ஈழநாடு காரியாலயத்திற்கு நேரில் வருகை தந்து, ஆசிரியர் பீடத்தினருடன் கலந்துரையாடினார். அவருடனான உரையாடலின் நேற்றைய தொடர்ச்சி...**

நாங்களும், அவர்களும் இணைந்து வேலை செய்யாவிட்டாலும் அவர்களுடைய தொடர்புகள் இருக்கின்றன.

**ஏனைய மனித உரிமை அமைப்புக்கள் - இலங்கையில் நடக்கும் மனித உரிமைகள்மீறல் தொடர்பாக முழுமையான தகவல்களைத் தரவில்லை என்று நான் நினைக்கிறேன். அது அப படி முழுமையான அறிக்கைகளை கொடுக்க முடியாத அல்லது அது போலியான அமைப்பா என்ற சந்தேகம் ஏற்படுகின்றது.**

சற்றுயோசித்தபடி முழுமையான அறிக்கை வரவில்லைத்தான். அங்கு அரசாங்கத்தின் அழுத்தம் கடுமையாக உள்ளது. மேலும் அந்த அமைப்புக்குள் - அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் பதவி வகிக்கின்றனர். சுயாதீனாமாக இயங்கவில்லை என்றுதான் குறிப்பிடலாம். அதை வெளிப்படையாகச சொல்ல விரும்பவில்லை.

**உங்களுடைய நோக்கங்கள் செயற்பாடுகள் தொடர்பான விடயங்களில் அந்த அமைப்பு எவ்வாறு முரண்படுக'ன்றது. இலங்கை இனப் பிரச்சனை பற்றி குறிப்பிடாதது பற்றி நட்புரீதியாக கதைத்ததுண்டா?**

ஆம். தனிப்பட்ட நட்புரீதியில் நாஙகள் கதைத்துள்ளோம்.

**காணாமல் போனவர்கள் தொடர்பான வழக்குகள் - காலங்கடந்தவை என்று சில இருக்கின்றன. அவற்றை இலங்கை நீதிமன்றங்களில் எடுத்துக்கூற முடியாத நிலைமையில், அவற்றை சர்வதேச நீதி மன்றங்களில் மனித உரிமை அமைப்புக்கள் உங்களைப் போன்ற அமைபபுக்கள் கொண்டுசெல்ல முடியாதா?**

தனிப்பட்ட மக்கள் நேரடியாகக்கொண்டு பேசலாம். அல்லது எம்மைப்போன்ற அமைப்புக்கள் மூலமாகக்கொண்டு செல்லலாம். இதற்குரிய வாய்ப்புக்கள் நிறைய உண்டு.

**இலங்கையில் மனிதஉரிமைகள் மீறபபட்டுள்ளன என்ற அறிக்கைகளை நீங்கள் வெளியிடுகின்றீர்கள். அவற்றை உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் இலங்கை நீதிமன்றங்கள் விசாரிக்கவில்லை. இவற்றைக்கொண்டு சர்வதேச நீதிமன்றங்கள'ல் வழக்கினை தொடர்ந்து, அதற்குரிய தீர்வுகளைக் காணலாம்தானே?**

இதுவரையில் இப்படிச் சம்பவம் நடந்ததாகத் தெரியவில்லை.

**இப்படியான சேவைகளைச் செய்வது என்றால கொழும்பிலிருந்து செய்யமுடியாது. அப்படி கொழும்புக்கு வெளியே செய்வதற்கு என்றால், அதன்பின்னர் கொழும்பில் தொடர்ந்தும் வேலை செய்யமுடியாது என்று குமார்பொன்னம்பலம் என்னிடம் முன்பு ஒருமுறை கூறினார். சர்வதேச நீதிமன்றங்களில் இவ்வாறு வழக்குகளைச் செய்யலாம் என்பது இதன்மூலம் தெரிகின்றது. அதற்குரிய ஆலோசனைகளைக் கொடுக்கலாம் என்பது அதிலிருந்து தெரிகின்றது. இததைப்பற்றி -**

என்னிடம் அதற்குரிய விண்ணப்பங்கள் உண்டு. அவற்றை நீங்கள் வெளியிடலாம்.

**உங்களிடம் தெரிவித்தவுடன் தங்கள் பிரச்சினை முடிந்துவிட்டதாக மக்கள் நினைக்கிறார்கள். அது ஒரு வெறும் பதிவுதான் என்பதை அவர்கள் உணரவில்லை. இவ்வாறான பிரச்சினைகளுக்கு உரியதீர்வுகளை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம் என்ற அறிவினை கொடுப்பதற்கு நீங்கள் எந்த வகையில் முயற்சிக்கலாம். என்வென்றால் இவையெல்லாம் சும்மா ஒரு கட்டுக்கட்டான ஆவணங்களாக மட்டுமே எஞ்சிவிடப் போகின்றனவா? அவர்களுக்கு ஏதாவது ஒரு வகையில், சட்டபூர்வமான ரீதியில் என்ன செய்யலாம்?**

இப்ப நீங்கள் சொன்னதுபோல, நேரடியாக இவர்கள் மனித உரிமை அமைப்புகளிடம் முறையிடலாம். வடக்கு - கிழக்கில் நடந்த மனித உரிமைமீறல்களில், நாங்கள் கொண்டு போய்ச் சமர்ப்பித்தது முழுமையானவை அல்ல மூன்றில் ஒன்றுகூட இல்லை என்றுதான் கூற வேண்டும். மனித உரிமைகள் பழசாக இருந்தாலும், அங்கு கொண்டுசெல்லக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. நீங்கள் கேட்டதுபோல ஒருவகையான செயற்பாட்டை மேற்கொள்ள நாங்கள் விரும்புகின்றோம்.

**உங்களுடைய பணி வித்தியாசமானது. இன்னொரு நாட்டில் இருந்து கொண்டு எங்களுடைய பிரச்சினைகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றீர்கள். நாங்கள் உங்களிடம் கேட்பது என்னவென்றால், நீங்கள் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்பதல்ல. நீங்கள் அதற்கான வழிமுறைகளை எங்களுடைய மக்களுக்குச் சொல்லலாம் என்பதுதான். ஏனென்றால், உங்களுக்கு நிறைய தொடர்புகள் இருக்கின்றன. நீங்கள் பல்வேறு நிறுவனங்களுடன் தொடர்பினை வைத்திருக்கிறீர்கள். வேறுநாடுகளில் இவ்வாறான பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்படுகின்றன என்பது பற்றிய விபரங்கள் இங்கே உள்ள மக்களுக்குத் தெரியாது. அவர்களுக்கு இவற்றைத் தெரியப்படுத்தும் வாய்ப்பு இல்லையென்றால், இந்த மனித உரிமை அமைப்பில் என்ன பயன் என்ற கேள்வி இருக்கிறதுதானே. நீங்கள் எங்களுடைய பிரச்சினையை உலகத்துக்கு அறிவித்துள்ளீர்கள். அதனால் எங்களுக்கு என்ன பயன் கிடைத்திருக்கின்றது?**

உண்மைதான். இதை ஒரு கதையாகத்தான் சொல்லவேண்டும்.

நாங்கள் ஒவ்வொருமுறையும் மனித உரிமை அமைப்புக்கள்மூலம் ஐ.நா. சபைக்குச் செல்லும்போது கேட்கின்றார்கள், அங்கு ஒரு விசேட நிருபர் - பாகிஸ்தான் பிரதிநிதியிடம் நாங்கள் இவ்வாறான கேள்வியைக் கேட்டோம் அவர் சொன்னார் - (**Mills of United Nation..... Slow but Sure|)** அது என்னவென்றால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார்கள். ஆனால், பொதுவாகத்தான் எடுப்பார்கள். நஷ்டஈடுகள் வழங்கப்படுவதற்கான பிரிவுகள் இருக்கின்றன.

# பாக்தாத்தில் அமெரிக்கப் படையினர் மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் ஒருவர் பலி!

## ரோந்து அணி மீதும் றொக்கெட் தாக்குதல்



பாக்தாத்தில் 'அல் கறடா' பிரதேசத்தில் சதாம் ஆதரவுப் படைகள் மறைந்திருந்து மேற்கொண்ட தாக்குதலில் - அமெரிக்காவின் முதலாவது கவச அணியைச் சேர்ந்த படையினர் ஒருவர் கொல்லப்பட்டார்.

சதாம் ஹுசேன் கைதான பின்னர் நடந்த நேரடியான துப்பாக்கிச் சமர் இதுவென தெரிவிக்கப்படுகிறது.

முதலாவது தாக்குதல் நடைபெற்று நான்கு மணித்தியாலங்களின் பின்னர் பாக்தாத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்கப் படையினர் மீது றொக்கட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும், இதன்போது ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கில் இதுவரை கொல்லப்பட்ட அமெரிக்கப் படையினர் எண்ணிக்கை 199 ஐ அடைந்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதேவேளை, புதன்கிழமை எண்ணைத்தாங்கி ஒன்று வெடித்ததில் 10 இற்கு மேற்பட்ட ஈராக்கியப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் தற்செயலாக நடைபெற்றதென அமெரிக்கப் படையினர் கூறியுள்ளனர்.

# சவுதியிலுள்ள சில இராஜதந்திரிகளை திருப்பியழைக்க அமெரிக்கா முடிவு!

## தாக்குதல் அச்சம் காரணமாம்



அதிமுக்கியமற்ற சில இராஜதந்திரிகளை சவுதி அரேபியாவிலிருந்து திரும்பவும் அழைத்துக்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

சவுதியில் வசிக்கும் அமெரிக்க பிரஜைகளை அந்த நாட்டிலிருந்து இயன்றளவு வெளியேற்றுவது தொடர்பாக ஆராய்ந்துவருவதாகவும் அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது.

சவுதியின் தலைநகர் றியாத்தில் தாக்குதல் நடத்தப்படலாம் எனவும்,

இதன்போது விமான நிலையங்கள் மற்றும் அமெரிக்கர்கள் தங்கியுள்ள விடுதிகள் என்பன தீவிரவாதிகளின் முக்கிய இலக்காகவுள்ளதனாலேயே அமெரிக்கப் பிரஜைகளின் எண்ணிக்கையை சவுதியில் குறைக்கத் தீர்மானித்துள்ளதாகவும், அமெரிக்கா மேலும் தெரிவித்துள்ளது.

சவுதியின் தலைநகர் றியாத்தில் அமைந்த செடெர் என்ற கிராமத்தில் மே மாதம் நடைபெற்ற தாக்குதலில் கொல்லப்பட்ட 35 பொதுமக்களில், 8 பேர் அமெரிக்கர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலியப் படையினரின் தாக்குதலில் நான்கு பலஸ்தீனப் போராளிகள் பலி!



பலஸ்தீனத்தின் மேற்குக்கரைப் பிரதேசமான நப்லுஸில் இஸ்ரேல் படையினருக்கும் பலஸ்தீனப் போராளிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் நான்கு பலஸ்தீனப் போராளிகள் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் இஸ்ரேலியப் படையினரை நோக்கி குண்டு ஒன்றுடன் முன்னேறியபோது, வீட்டின் கூரை ஒன்றின் மீது இருந்த ஏனைய 3 பலஸ்தீனப் போராளிகளும் தம்மீது துப்பாக்கிபிரயோகத்தை மேற்கொண்டதாக இஸ்ரேல் படையினர் தெரிவித்தனர்.

இதேவேளை, யசீர் அரபாத்தின் 'பக்தா' அமைப்புடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 'ரன்சிம்' எனப்படும் தீவிரவாத குழு ஒன்றின் அங்கத்தவர்களைத் தேடியே- இஸ்ரேல் படையினர் கவசவாகன அணியுடன் நப்லுஸ் நகரை செவ்வாய்க்கிழமை முற்றுகையிட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இந்த முற்றுகையில் கொல்லப்பட்டவர்களில் ஒருவரின் உடலில் 15 இற்கு மேற்பட்ட ரவைகள் பாய்ந்துள்ளதாக, வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

பலஸ்தீன தற்கொலை குண்டுதாரிகள் இஸ்ரேலினுள் ஊடுருவுவதை தடைசெய்வதில் இஸ்ரேல் படையினர் அதிகம் கவனம் செலுத்திவருவதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் - அமெரிக்க அரசினால் முன்னெடுத்துச்செல்ல உத்தேசித்துள்ள சமாதனத்திற்கான பாதை வரைபு தோல்வி அடையும் நிலையில், ஒருதலைப்பட்சமான முடிவுகள் எடுக்கநேரிடலாம் என எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காஷ்மீர் பிரச்சினைத் தீர்விற்கு கருத்துக்கணிப்பு தேவையில்லை!

## பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் அறிவிப்பு



காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அங்குள்ள மக்களிடையே கருத்துக்கணிப் ஒன்று நடத்தப்படவேண்டும் என, ஐ.நா சபை முன்னர் தெரிவித்திருந்தது. இந்தக் கருத்தை பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பும் முதலில் ஆதரித்துக் கருத்துத் தெரிவித்திருந்தார். ஆனால், இதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தது.

எனினும், தற்போது பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பும் மக்கள் கருத்துக்கணிப்பு தேவையில்லை என்று தெரிவித்துள்ளார்.

மேலும், காஷ்மீர் பிரதேசம் இரு நாடுகளினதும் எல்லைப்பிரதேசமல்ல என்றும், இரு நாடுகளும் பொதுவாக ஒரு இடத்தில் இந்தப் பிரச்சினை தொடர்பாகப் பேச்சுக்களில் ஈடுபடலாம் எனவும் முஷாரப் றொய்ட்டர் செய்தி ஸ்தாபனத்துக்குத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அதிபர் முஷாரப் தற்போது தெரிவித்துள்ள கருத்துக்கு இந்தியா இது வரை எந்தப் பதிலையும் தெரிவிக்கவில்லை.

காஷ்மீர் பிரதேசத்தில் கூடிய அளவில் முஸ்லிம்கள் வசிப்பதால், அந்தப்பிரதேசம் முஸ்லிம் நாடான பாகிஸ்தானுக்குச் சொந்தம் என்று, பாகிஸ்தான் 1947 ஆம் ஆண்டு தெரிவித்தது. ஆனால், காஷ்மீர் இந்தியாவிற்கு சொந்தமானது, இதில் இரு கருத்துக்களுக்கு இடமில்லை என, இந்தியா தொடர்ந்து தெரிவித்துவருகிறது.

இந்தப் பிரதேசம் தொடர்பான சர்ச்சைகளால் இருநாடுகளும் இருமுறை போரில் ஈடுபட்டிருந்தன.

ஆனால், அண்மைக்காலத்தில் இரு நாடுகளிடையேயான உறவில் முன்னேற்றம் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.



# உலக நோக்கு

# தனது நாட்டுக் கைதியின் நிலையை அறிய அவுஸ்ரேலிய சட்டத்தரணி கியூபா விஜயம்!



அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த வழக்கறிஞரான ஸ்ரெப்டன்கெனி - கியூபாவிலுள்ள குவன்ரனமோ தடைமுகாமிற்கு தனது நாட்டுக் கைதி ஒருவரின் நிலை தொடர்பாக அறிந்துகொள்வதற்குச் சென்றுள்ளார்.

குவன்ரனமோ தடுப்பு முகாமில் தலிபான் போராளிகளும், அல்கொய்டா இயக்கத்தைச் சேர்ந்தவர்களும், விசாரணைகள் எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த முகாமிற்கு விஜயம் செய்த அவுஸ்திரேலிய வழக்கறிஞர் - தடுப்புமுகாமில் கைதிகள் எல்லோரும் ஒரே நிலையில் நடத்தப்படவில்லையெனவும், தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் பாரபட்சமான முறையில் பராமரிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கக் கைதிகளுக்கு அதிக சலுகைகள் கொடுக்கப்படுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

அத்துடன், மனிதஉரிமை அமைப்புக்களும் இந்தச் செயலை வன்மையாகக் கண்டித்துள்ளன.


இதேவேளை, சர்வதேச சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு - போர்க்கால கைதிகளுக்கான சலுகைகள் இந்தக் கைதிகளுக்கு வழங்கப்படமாட்டாதென, அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்தார். இவர்கள் சட்டத்திற்கு மாறாக போரில் ஈடுபட்டவர்கள் என்பதாலேயே இவர்களுக்குச் சர்வதேச விதிமுறைகள் பின்பற்றப்படமாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவர்கள் மீது குற்றப்பத்திரிகைகள் தாக்கல்செய்யப்படமாட்டாது எனவும், வக்கீல்களின் ஆலோசனைகளைப் பெறும் தகுதியும் இவர்களுக்குக் கிடையாதெனவும் புஷ் மேலும் தெரிவித்தார்.

660 இற்கும் மேற்பட்ட தலிபான்கள் மற்றும் அல்கொய்டா சந்தேக நபர்கள் இந்தத் தடுப்புமுகாமில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 'சார்ஸ்' நோய் பரவியதற்கு விமானப் பயணமே காரணம்

## பிரிட்டன் வைத்திய சஞ்சிகை தெரிவிப்பு



இந்த ஆண்டில் 'சார்ஸ்' என்னும் நோய் பல நாடுகளுக்குப் பரவியதற்கு விமானப் பிரயாணமே காரணமென, பிரிட்டன் வைத்திய சஞ்சிகை தெரிவித்துள்ளது.

இந்த நோய் தொடர்பான ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றை பிரிட்டன் வைத்திய சஞ்சிகையொன்று வெளியிட்டுள்ளது.

விமானப்பிரயாணி ஒருவர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருந்ததால் அவர் ஒரு காவியாகச் செயற்பட்டதாகவும் இந்தச் சஞ்சிகை தெரிவித்துள்ளது.

மேலும் விமானப் பயணத்தின்போது இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அருகில் இருந்தவர்களே அதிக அளவில் பாதிக்கப்பட்டதாகவும் ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. இந்த ஆய்வு - சார்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுடன் பயணித்தவர்களிடையே விஞ்ஞானிகளால் மேற்கொள்ளப்பட்டது. சார்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு முன் மூன்று வரிசையில் இருந்தவர்களே அதிகம் பாதிக்கப்பட்டிருந்தமை இந்த ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## கொக்குவிலில்...

சேர்ந்த பாலசிங்கம் சிவலிங்கம் (வயது-30), சின்னராசா மயூரன் (வயது-29) ஆகியோரைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

இவர்கள் இருவரையும் விசாரணைக்காக நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர்செய்தபோது, நீதிவான் இளஞ்செழியன் எதிர்வரும் 29ம் திகதிவரை சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கொக்குவிலில் உள்ள கோயில் ஒன்றில் திருடப்பட்ட இந்த பிள்ளையார் சிலை 18 அங்குல உயரமும், 24 கிலோ எடையும் கொண்டதாகும்.

அதுகுறித்து சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி, மிஸ்கின் கருத்து தெரிவிக்கையில்.

கைப்பற்றப்பட்ட பிள்ளையார் சிலை மிகவும் பழமைவாய்ந்த தென்றும்,விலைமதிக்க முடியாத பெறுமதிவாய்ந்ததென்றும் புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர்கள் தெரிவித்ததாக குறிப்பிட்டார்.

சந்தேகநபர்களிடம் இது குறித்து விசாரணை நடத்தியபோது, வவுனியா நெடுங்குளத்திலிருந்து அந்த சிலை எடுத்துவரப்பட்டதாக கூறியதாகவும், சந்தேகநபர்கள் அந்த சிலையை சட்டவிரோதமாக கறுப்புச் சந்தையில் விற்கத்திட்டமிட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## புதிய இராணுவத்..

சினேகபூர்வமாக கலந்துரையாடிய பின்னர் யாழ். ஆரியகுளம் சந்திப் பகுதியிலமைந்துள்ள நாகவிகாரைக்கு சென்று வழிபட்டபின்னர், நல்லூர் கந்தன் ஆலயத்திற்கும் சென்று அங்கு நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளில் பங்குகொண்ட இராணுவத் தளபதி அங்கு நின்ற மக்கள் சிலருடனும் கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பூசை வழிபாடுகளை முடித்துக் கொண்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு சென்று அங்கும் அதிகாரிகள் சிலரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்றைய கலந்துரையாடல்களின்போது, குடாநாட்டு நிலவரங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாகவும், அதிகாரிகளின் ஒத்துழைப்பை இராணுவ தளபதி வேண்டிக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால எதிர்வரும் 23 ஆம் திகதி அரசாங்க அதிபர் உட்பட அரச அதிகாரிகளை யாழ். செயலகத்தில் சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பிற்கு யாழ். அரச அதிபர், அரசாங்கத் திணைக்கள, கூட்டுத்தாபன மற்றும் அதிகாரசபைகளைச் சேர்ந்த அதிகாரிகள் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளார்கள் எனத் தெரியவருகிறது.

### யாழ் குடாநாட்டில்

# காணாமற்போனோரின் கதியை அறியத்தருமாறு கொழும்பில் மறியற்போராட்டம் நடத்த முஸ்தீபு!

(கொழும்பு)

காணாமல்போன எமது உறவுகளின் நிலையைத் தெரியப்படுத்தாவிட்டால் இவ்வருட இறுதிக்குள் நீதி அமைச்சின் முன்னாலும், கொழும்பு மனித உரிமைகள் ஆணைக்குழு முன்பாகவும் மறியற்போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளோம் என படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நீதி அமைச்சர் லொக்கு பண்டாரவிற்கு இச் சங்கம் அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றிலேயே இந்த எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. அவ் அறிக்கையின் விபரம் கீழ்வருமாறு-

1996,1997 ஆம் ஆண்டு காலப் பகுதிகளிலே எமது உறவுகள் 234 பேர் படையினரால் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் தொடர்பாக எதுவித தகவல்களும் இதுவரை எமக்கு கிடைக்காத நிலையில் இது தொடர்பாக பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் ஆகியோர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளோம்.

ஆனாலும், அவர்களிடமிருந்து எமக்கு எதுவித சாதகமான பதில்களும் கிடைக்கவில்லை. இந்த நிலையில் தொடர்பாக கடந்த ஏழு வருடங்களாக நாம் பலருடன் தொடர்புகொண்டோம். ஆனால், நாம் ஏமாற்றமடைந்ததே மீதியானது.

அண்மையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மூலமாக தேவநேசன் நேசையா, இக்பால் ஆகியோர் அடங்கிய விசாரணைக்குழு காணாமற் போனோர் விடயமாக வெளியிட்டுள்ள அறிக்கைகள் உண்மைக்குப் புறம்பானது.

1996 இல் நாவற்குழி படை அதிகாரி டுமிந்த என்பவரால் சுற்றிவளைப்பொன்றின்போது, 24 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். இதில் கைது செய்யப்பட்டவர்களின் நிலை தொடர்பாக எந்தவித தகவல்களும் இல்லை. இவர்களுள் ஒருவரான சின்னத்தம்பி சிவகுமார் என்பவர் அனுராதபுரம் நீதிமன்றின் ஊடாக பிணையில் விடுதலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், அவர் இதுவரை வீடு திரும்பவில்லை. அவரை பிணையில் எடுத்தவரின் விபரங்களும் வெளியிடப்படவில்லை. இது தொடர்பாக நீதிமன்றில் பதிவுகள் இல்லையென கூறப்படுகிறது. தமிழ்க் குழுக்கள் எவராயினும் இவரை பிணையில் எடுத்துள்ளார்களா?

இலங்கையில் நீதி இல்லையா? பக்கச்சார்பான விசாரணைகள் இன்றி எமக்கு தாங்கள் உண்மை நிலையை தெளிவுபடுத்த வேண்டும். இல்லாவிடில் தங்கள் அமைச்சு முன்னாலும் கொழும்பு மனித உரிமைகள் ஆணைக்குழு முன்பாகவும் மறியற் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் என அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

## நாடாளுமன்றம் கலைக்கப்...

யும், நாடாளுமன்ற தேர்தலை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக அறிவித்திருந்தது.

வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்படாமல் நாடாளுமன்றத்தைக் கலைத்தால், நிதி நெருக்கடிகள் ஏற்படலாம் என்பதால் வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதும் நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு 32 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதை அடுத்து, ஜனாதிபதி சந்திரிகா நாடாளுமன்றத்தைக் கலைக்க முடிவெடுக்கலாம் என கொழும்பு அரசியல் வட்டாரத்தால் பேசப்படுகிறது.

கொழும்பில் அரசியலில் ஸ்திரமற்ற நிலை காணப்படுவதால் பொருளாதார மந்தநிலை காணப்படுவதுடன், விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களும் தடைப்பட்டிருக்கின்றன.

இதனால், அதிகார இழுபறியை முடிவுக்கு கொண்டுவர தேர்தல் நடத்தப்பட வாய்ப்பிருப்பதாகக் கூறப்படுகின்ற அதேவேளை, பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்களும் முக்கிய கட்சிகளும் இப்போதைக்கு தேர்தல் ஒன்று நடைபெறுவதை விரும்பவில்லையெனவும் கூறப்படுகிறது.

குறுகிய காலத்திற்குள் இரண்டு தேர்தல்களை எதிர்கொண்டதால், மூன்றாவது தேர்தலை எதிர்கொள்ள போதிய நிதிவளம் இல்லாதிருப்பதாக முக்கிய கட்சிகளின் பிரமுகர்கள் கட்சித் தலைமைகளிடம் தெரிவித்துள்ளனர்.

சாதாரணமாக ஒரு வேட்பாளர் இரண்டு மில்லியன் ரூபாவை தேர்தலுக்காக செலவிட வேண்டி இருப்பதாகவும் கொழும்பு போன்ற இடங்களில் போட்டியிடும் வேட்பாளர்களில் சிலர் பத்து மில்லியன் ரூபாவுக்கு அதிகமாக செலவிடுவதாகவும் கூறப்படுகிறது.

இந்தளவுக்குச் செலவிட்டு - குறுகிய காலத்திற்குள் மூன்றாவது தேர்தலை எதிர்கொள்வதற்குத் தாம் தயாரில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் ஜனாதிபதி சந்திரிகா மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு நாடாளுமன்றத்தைக் கலைப்பது சிக்கலைத் தோற்றுவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சிக்கல் நிலையால் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்துவது குறித்து, உடனடியாக எந்த முடிவையும் எடுக்க முடியாத நிலை ஜனாதிபதி சந்திரிகாவிற்கு ஏற்பட்டிருப்பதாகவும், கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## திட்டவரையும், கடற்புலிகளின்...

தொடர்பான எனது கருத்தை அவர்கள் கவனத்தில் எடுத்தனர்.

அரசாங்கத்துடனான சமாதானப் பேச்சுக்களின்போது, பாக்குநீரிணைப் பகுதியில் மூன்றாவது படையாகச் செயற்பட தமது கடற்புலிகளை அங்கீகரிக்கவேண்டுமென விடுதலைப் புலிகள் கோரியிருந்தனர்.

கடந்த இரண்டு வருட காலத்தில் விடுதலைப் புலிகள் தமது பலத்தை இரு மடங்காக அதிகரித்துள்ளதை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூட நாடாளுமன்றத்தில் ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்த வருடம் ஏப்ரல் மாதம் ஜனாதிபதி சந்திரிகாவும் நானும் புதுடெல்கிக்கு வந்தபோது, விடுதலைப் புலிகளின் படைக்கட்டுமாண வளர்ச்சி தொடர்பாக இந்திய அதிகாரிகளுக்குத் தெரிவித்ததுடன், முதற்தடைவையாக அவர்களது கடற்புலிகள் தொடர்பாகவும் தெரிவித்தோம். இந்தத் தகவல்களைக் கேட்ட இந்திய அதிகாரிகள் அதிர்ச்சியடைந்தனர்.

இரண்டாவது தடவையாக கடந்த ஓகஸ்ட் மாதம் நான் இங்கு வந்தபோது, இலங்கையின் கிழக்குப் பகுதியான திருகோணமலையில் விடுதலைப் புலிகள், தமது நடவடிக்கைகளைப் பலப்படுத்தி வருவதையும், பாதுகாப்புப் படைமுகாம்களுக் கருகில் தமது ஆட்லறிகளை நிலைநிறுத்தி வருவதான படங்களை இந்திய அதிகாரிகளுக்குக் காட்டியிருந்தேன்.

விடுதலைப் புலிகளின் இந்தச் செயற்பாடுகள் தொடர்பாக இந்தியா என்ன செய்யப்போகிறது என்று எனக்குத் தெரியாது. நான் அதுபற்றி அவர்களைக் கேட்கவுமில்லை.

ஆனால், விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் தொடர்பாக இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகின்றதென்பது மட்டும் எனக்கு நன்றாகத் தெரியும்.

இந்தியா தொடர்பான விடுதலைப் புலிகளின் கருத்துக்கள் அண்மையில் மாற்றமடைந்து வருகின்றது. அந்த இயக்கத்தின் தத்துவாசிரியரான அன்ரன் பாலசிங்கம் கூட விடுதலைப் புலிகளுடன் இந்தியா நட்புறவை வளர்க்க வேண்டுமெனத் தெரிவித்திருந்தார். இவரின் கூற்றை ஒத்த கருத்தையே அந்த இயக்கத்தின் தலைவரான பிரபாகரனும் முன்னர் வெளியிட்டிருந்தார்.

அத்துடன், இந்தியா தொடர்பில் தேவையற்ற கருத்துக்களைத் தெரிவிக்கவேண்டாமென தனது இயக்கத்தின் உறுப்பினர்களுக்கு பிரபாகரன் உத்தரவிட்டுள்ளார். இதனையே பாலசிங்கம் இறுகப் பிடித்துள்ளார்.

இந்தியாவின் பங்களிப்பு இல்லாமல் இலங்கையில் ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படமாட்டாதென்பது எங்கள் எல்லோருக்கும் தெரியும்.

சர்வதேச நாடுகளில் இந்தியாவே பிரச்சினையைத் தீர்க்கும் நிலையிலுள்ளது. அது விடுதலைப் புலிகளுக்கு மிகுந்த சிக்கலைத் தோற்றுவித்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பழ.நெடுமாறன்...

சென்னை உயர்நீதிமன்றம் - தடை செய்யப்பட்ட தீவிரவாத அமைப்புகளுக்கு தார்மீக ஆதரவு தருவது 'பொடா' குற்றமாகாது.

ஒரு ஆண்டுக்கு மேல் 'பொடா' சட்டத்தின் கீழ் கைதாகி சிறையிலிருப்பவர்களுக்கு பிணை வழங்குவதில் சாதாரண நடைமுறைகளே கடைப்பிடிக்கப்படவேண்டும் என்று தீர்ப்பளித்தது.

இதன் அடிப்படையில் நெடுமாறன் உள்ளிட்ட நான்கு பேரையும் உயர்நீதிமன்ற நீதிபதிகள், சிர்புர்கர் மற்றும் தணிகாசலம் ஆகியோர் அடங்கிய அமர்வு நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதித்தது.

இவர்கள் மேல் வேறு வழக்குகள் இல்லை என்பதால் இவர்களைச் சிறையில் வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

கொள்கை அடிப்படையில் இவர்கள் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியது குற்றமா, இல்லையா என்பதை நீதிமன்றம் முடிவுசெய்யும் என்று கூறிய நீதிபதிகள், நான்கு பேரையும் விடுதலை செய்ய உத்தரவிட்டனர்.

நான்கு பேரும் 50 ஆயிரம் ரூபா நிபந்தனைப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சென்னையைவிட்டு வெளியேறக்கூடாது என்றும், வழக்கு விசாரணைக்குத் தேவைப்படும்போது நீதிமன்றில் ஆஜராக வேண்டுமென்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

தமிழகத்தில் 'பொடா' சட்டத்தின்கீழ் கைதாகி பிணையில் விடுதலையாகியுள்ளவர்கள் இந்த நால்வரும்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் 15 மாதங்கள் இவர்கள் சிறையில் வாடிவந்தனர்.

## 32 மேலதிக....

ஆதரவாக 114 வாக்குகளும், எதிராக 82 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், புளொட் உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்தனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத அதேவேளை - ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் 2004 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட யோசனைகளை கடந்த மாதம் 19 ஆம் திகதி நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

இதனை அடுத்து நவம்பர் 20 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை இரண்டாவது வாசிப்பின் மீதான விவாதம் நடைபெற்றது. அதனையடுத்து டிசம்பர் 1 ஆம் திகதி முதல் நேற்று வரை மூன்றாம் வாசிப்பின் மீதான விவாதம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## விடுமுறையில்...

நாடு திரும்புவார். அதுவரை ஜனாதிபதியின் செயலாளர் டபிள்யூ கே.என். கருணாரத்ன அதிகார இழுபறி குறித்த பேச்சுக்களை கையாள்வார் எனத் தெரிவித்தார்.

தற்போது இரண்டு கட்சிகளும் இணைந்து தயாரித்துள்ள இணக்கத்தீர்வு குறித்து ஆராய்ந்து வருவதாகவும் இந்த மாத இறுதியில் பிரதமரும் ஜனாதிபதியும் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ்மா...

கம் தெரிவித்துள்ளது. பொலிஸ்மா அதிபராக இருந்த ஆனந்தராஜா பதவியில் இருந்து விலகிய பின்னர் கடந்த இரண்டு மாத காலமாக பொலிஸ்மா அதிபர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா இந்திரா டி சில்வாவை பதில் பொலிஸ்மா அதிபராக பதவியுயர்வு செய்த போதிலும் சிரேஷ்ட தன்மை தொடர்பில் அந்த நியமனத்தில் தாமதம் ஏற் பட்டது.

எனினும், தற்சமயம் இந்திரா டி சில்வா பொலிஸ்மா அதிபராக நியமனம் பெறவுள்ளார்.

NEW SCIENCE HALL
கன்னாதிட்டி யாழ்ப்பாணம்
A/L 2006
கணித, உயிரியல் பிரிவு
(எமது வழமையான ஆசிரியர் குழு)
ஆரம்பம் : 28.12.2003
குறிப்பு : 24.12.2003 இலிருந்து அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்
(சி-1899)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.